# வசந்தம்



ஓராண்டுச் சிறப்பிதழ் /35

# நாணயப் பெறுமதி இறக்கமும் இந்தியப் பத்திரிகைகளும்

இந்தியா தனது நாணயத்தின் பெறுமதியை வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் 36·5 வீதத்தினால் சமீபத்தில் குறைத்ததும் அதனால் இந்தியாவில் ஏற்பட்ட அல்லோலகல்லோலங்களும் யாவரும் அறிந்ததே. நாணய மதிப்பிறக்கத்துக்கு முன் ஒரு ரூபாய் இந்திய நாணயம் இலங்கையில் ஒரு ரூபாவுக்குச் சமமாக இருந்தது. இவை மதிப்பிறக்கத்தின் பின் இந்திய ஒரு ரூபாய் இலங்கையில் 63½ சதத்துக்கே சமானம். அதாவது முன்பு ஒரு இந்தியப் பொருளை வாங்க 1 ரூபாய் தேவைப்பட்டிருந்தால் இன்று 63½ சதமே போதும் அல்லது 1000 ரூபா விற்ற இந்தியப் பொருளின் பெறுவதி இன்று 635 ரூபாவாக இருக்கும். வேறுவகையில் சொன்னால் இந்திய அரசு செய்த நாணயப் பெறுமதி இறக்கத்தின் காரணமாக வெளிநாடுகளில் இந்தியப் பொருள்களின் விலைகள் வீழ்ந்துவிடும்.

இவ்விலை வீழ்ச்சி ஏனைய பொருள்களைப்போல் இந்தியப் பத்திரிகைகளுக்கும் பொருந்தும். இலங்கையில் விற்பனையாகும் ஒவ்வொரு இந்தியப் பத்திரிகையும் அதன் விலையிலிருந்து ஏறக்குறைய மூன்றிலொரு பங்குக்கு மேல் குறைந்திருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை பல இந்தியப் பத்திரிகைகள் இன்னும் பழைய விலையிலேயே விற்றுக் கொண்டிருக்கின்றன. சில வடஇந்திய ஆங்கிலப் பத்திரிகைகள் மட்டும் விலையை ஓரளவு குறைத்துள்ளன. ஆனால் அவையும் உண்மையாகக் குறைத்திருக்க வேண்டிய அளவிற்குக் குறைக்கவில்லை. இதில் மிகப் பெரிய ஆச்சரியம் என்னவெனில் சில பத்திரிகை



கள் பெறுமதி இறக்கத்துக்குப் பிறகு தமது வெளிநாட்டு, குறிப்பாக இலங்கையில் விற்கும் விலைகளை உயர்த்தி உள்ள தான். பெறுமதி இறக்கத்தினுல், விலைஉயர்வதானுல் இந்தியப் பத்திரிகைகளின் உள்நாட்டு விலையுயருமே ஒழிய வெளிநாட்டு விலை உயர்வை எமது நாட்டுச் சுங்க இலாகாவினர் ஆட்சே பித்துள்ளனர். இந்தியாவில் காகிதத்தின் விலை உயர்ந்துள்ள தாகவும் அதனுல்தான் பத்திரிகைகளின் விலையை உயர்த்த நேர்ந்ததென்றும் இப்பத்திரிகையாளர்கள் கூறியுள்ளார்கள். ஆனுல் இது எவரையும் ஏமாற்றுது, காகிதத்தின் விலையுயர்ந் திருந்தால் அது எல்லா இந்தியப் பத்திரிகைகளுக்கும் பொது வானது ஏனைய பத்திரிகைகள் விலையை உயர்த்தாமலிருக்க இரண்டொரு பத்திரிகைகள் மட்டும் ஏன் விலையை உயர்த்த வேண்டும்? உண்மையில் காகிதம் விலை உயர்ந்திருந்தால் இந் தியப் பத்திரிகைகளின் இந்திய விலையும் கூட உயர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வெளிநாட்டில் மட்டும் விலை உயர்வு ஏன்? நியாயப்படி விலை குறைந்திருக்கவேண்டிய இடத்தில் உயர்வாகவும், உயர்ந்திருக்க வேண்டிய இடத்தில் குறைவாகவும் இருப்பது வேடிக்கையானதுதான். வாதத்துக் காக இந்தியாவில் காகித விலை உயர்ந்துள்ளது எனக் கொண் டாலும் நாணயப் பெறுமதி இறக்கத்தின் பின் வெளிநாடுகளில் ஏற்கெனவே உள்ள விலைகள் உயர்வானவைதானே!

நமது வாதமெல்லாம் எமது நாட்டுப் பத்திரிகை இறக்கு மதியாளர் அனுவசியமாக வெளிநாட்டுக்குப் பணத்தை இழக் கிறுர்கள் என்பதுதான். நாம் கீழே சில இந்தியப் பத்திரிகை களின் நாணய மதிப்பிறக்கத்துக்கு முன் உள்ள (இலங்கை) விலைகளையும், பின்னுள்ள விலைகளையும் உண்மையில் விற்கப் படவேண்டிய விலைகளையும் தந்துள்ளோம்.

| | மதிப்பிறக்கத்துக்கு முன் | இன்று விற்கும் விலை | உண்மையில்விற்க வேண்டிய விலை |
|---|---|---|---|
| இல்லஸ்டேட்டட் வீக்லி | 80 சதம் | 65 | 51 |
| பிலிம் பெயர் | 80 ,, | 65 | 51 |
| பெமினு | 60 ,, | 45 | 38 |
| குமுதம் | 25 ,, | 25 | 16 |
| ஆனந்தவிகடன் | 30 ,, | 30 | 19 |

| | | | | |
|---|---|---|---|---|
| கல்கி | 30 | ,, | 30 | 19 |
| மஞ்சரி | 50 | ,, | 80 | 32 |
| கலைமகள் | 60 | ,, | 95 | 38 |

விற்கவேண்டிய விலையையும் விற்கும் விலையையும் ஒப்பிட்டால் நாம் எவ்வளவு அநியாய விலை கொடுக்கிறோம் என்பது தெரியும். எமது நாட்டுச் சுங்க இலாகாவினர் இந்த விலையுயர்வை எதிர்த்துள்ளமையால் சில மாதங்களாக இந்தியப் பத்திரிகைகளுக்கான கொடுப்பனவுகள் தடைப்பட்டுள்ளன என்று அறிய வருகின்றது. இதைச் சில 'ஈழநாட்டு''ப் பெரியவர்களைப் பிடித்துச் சரிக்கட்டத்தான் இந்தியப் பத்திரிகை ஆசிரியர் சிலர் இலங்கை வந்து போயிருக்கிறார்களென நம்ப வருகிறது.

இலங்கை மக்களைப் பொறுத்தவரை, இந்தியக் குப்பைகளை இறக்குமதி செய்வதற்காக எமது குறைந்து செல்லும் அந்நியச் செலவாணியை வீணடிக்கவோ எமது தனித்துவமான கலை இலக்கியங்களை இந்திய ஆதிக்கத்துள் அமுக்கிப் போகவோ விடுவதற்கு தயாரில்லை. எமது பொருளாதாரவிருத்தி எமது இருப்பிலுள்ள அந்நியச் செலவாணியின் தொகையில் அதைக் கொண்டு நாம் இறக்குமதி செய்யக் கூடிய இயந்திரங்களின் அளவில் தங்கியிருப்பதால், தேவையற்றதும் அதே சமயத்தில் அநியாய விலையுடையதுமான இறக்குமதிகளில் கடும் நடவடிக்கை எடுக்குமாறு நாம் அரசாங்கத்தைக் கோருகிறோம்.

ஒன்றில் இந்தியப் பத்திரிகைகள் அவற்றின் உண்மையான விற்கவேண்டிய விலைகளில் விற்கப்பட வேண்டும்.

அல்லது, இந்தியப் பத்திரிகைகளின் இறக்குமதி அளவைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இப்பத்திரிகைகள் அவற்றின் உண்மையான விலைகளில் விற்கப்பட்டால் இப்போது இந்தியாவிலிருந்து வந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளை இறக்குமதி செய்வதற்குத் தேவைப்படுகின்ற அந்நியச் செலவாணி முந்திய அளவாக இராது. ஒரே அளவில் இறக்குமதி செய்ய இப்போது ஒதுக்கப்பட்டுள்ள அந்நியச் செலவாணியில் மூன்றில் இரண்டு பங்கே போதுமானதாகும். ஆகவே இப்போது இந்தியப் பத்திரிகைகளின் இறக்குமதிக்காக வழங்கப்படும் அந்நியச் செலவாணியின் கோட்டாவை மூன்றில் இரு பங்காகக் குறைக்க வேண்டுமெனவும் கோருகிறோம்.

## அல்சேஷியன் நாயும் அமெரிக்க மாவும்

இலங்கையின் புதிய வரவு செலவுத்திட்டம் பல விதத்திலும் வரி விலக்கல்களையும், சாதாரண மக்களுக்கு பல விதத்திலும் நன்மையையும் கொடுப்பதாய் கூறப்பட்டிருந்தது.

இலங்கையில் உள்ள பணக்காரர்களால்தான் வெளிநாடுகளிலிருந்து அதிக செலவில் உயர்ந்த இன அல்சேஷியன் நாய்களை வாங்க முடியும், இதுவரை அல்சேஷியன் நாய் இறக்குமதி செய்வதானால் அதற்கு 500 ரூபா தீர்வை வரி கட்டவேண்டும். இந்த வரவு செலவுத்திட்டத்தில் அல்சேஷியன் நாய்களை கூடியளவில் இறக்குமதி செய்வதற்காக 500 ரூபா தீர்வையை 250 ரூபாவாகக் குறைத்திருக்கிறார்கள்.

இலங்கையின் சாதாரணமக்களின் அன்றாட உணவுப் பொருட்களில் மா மிக முக்கியமானதாகும். இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒரு இறாத்தல் மாவுக்கு 5 சதம் விலை உயர்த்தப் பட்டிருக்கிறது.

தகவல் : ஜெயம்

* * *

## அட்டைப்பட விளக்கம்

கொழும்பில் நடைபெற்ற 'ஓவியன் கண்ட காவியம் என்ற கண்காட்சியில் சிங்களக் கவிஞர் திரு. ரீ. எஸ். அபயவிக்ரமாவின் கவிதைக்கு ஓவியர் குணசிறீ. கொலம்பகேயினால் தீட்டப்பட்ட ஓவியமாகும்.

ஓவியத்துக்கான கவிதை —

நறுவத் தேனீ நலிந்து நலிந்து
சிறுச்சிறு துளித்துளி சேர்த்துச் சேர்த்து வைத்
தமுதத் தேனெல்லாம் எவரோ கவரப்
பறிகொடுத்தல மரும் பான்மை என்னென்னே!

தமிழில் : **சில்லையூர் செல்வராசன்.**

றப்பர்த் தோட்டத் தொழிலாளியை தேனீயாகவும், பணத்தைத் தேனாகவும் தேனெடுப்பவனை முதலாளியாகவும் கவிஞன் கண்டுள்ளான்.

# அன்பான வாசகர்களுக்கு

இலங்கையில் ஒரு கலை இலக்கிய மாத இதழை நடத்துவது முடியாத செயல் என்று பலர் எச்சரிக்கைகள் செய்த போதும் நடத்த முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் வசந்தத்தை ஆரம்பித்தோம். எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. வசந்தத்திற்கு வாசகர்கள் மத்தியில் அமோகமான வரவேற்புக் கிடைத்தது.

வசந்தத்தை விமர்சித்தும், பாராட்டி வரவேற்றும் எழுதும் இலக்கிய அன்பர்கள் ஒரு பயத்தையும் தங்கள் கடிதத்தில் தெரிவிக்கத் தவறுவதில்லை. அதுதான் வசந்தத்தின் நிதி விசயம். பல அன்பர்கள் வசந்தத்திற்கு சிறு நிதியை இடைக்கிடை உதவுகின்றார்கள். விளம்பர பலமோ எங்களுக்கு மிகவும் குறைவு. இந்த நிலையில் வசந்தம் இதழுக்கு நிரந்தரமான பணபலம் அவசியப்படுகின்றது

வசந்தம் ஆதரவாளர்கள் தெரிவித்த யோசனையின்பேரில் நாங்கள் வசந்தம் சந்தா சேர்ப்பு இயக்கத்தை நடத்தி வருகின்றோம். செப்டம்பர் மாதத்திற்குள் இரண்டாயிரம் சந்தாதரர்களைச் சேர்ப்பதென்ற இலக்கினை முன் வைத்து இச் சந்தா இயக்கம் வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

இரண்டாயிரம் சந்தா சேகரிக்கும் இந்த இயக்கத்தில் இப்போதுள்ள வசந்தம் வாசகர்கள் அனைவரும் கலநதுகொள்வார்கள் என்பதை நாம் அறிவோம். குறுகிய கால எல்லைக்குள் நாம் இந்த இலக்கினை அடைய வேண்டியிருப்பதால், வாசகர்கள் இம் முயற்சியில் உடனடியாக ஈடுபடவேண்டும். இதற்கு உற்சாகமளிக்கும் வகையில் சந்தா சேர்ப்போருக்கு நாங்கள் இலக்கிய அன்பளிப்புகள் செய்யவும் முன்வந்திருக்கின்றோம். ஒருவர் பத்துச் சந்தாதரரைச் சேர்த்துக்கொடுத்தால் அவருக்கு பத்து ரூபா பெறுமதியான ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படும். இந்தச் சந்தா சேர்ப்பு இயக்கத்தில் பங்கு கொள்ள விரும்புவோர், வசந்தம் அலுவலகத்துக்கு எழுதி தங்களுக்குத் தேவையான சந்தாப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

'வசந்தம்' சந்தா சேர்ப்பு இயக்கத்தில் பங்கு கொள்வதன் மூலம் ஈழத்துக் கலை இலக்கியத்தை மேம்படுத்தும் முயற்சியிலும் நீங்கள் பங்குகொள்ளுகின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

சரித்திரம் கூறும்

## பாடம்

இலங்கையின் இயற்கை அமைப்பை ஒருமுறை எடுத்துப்பாருங்கள். எத்தனை நூற்றுக்கணக்கான குளங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அனேகமான ஊர்கள், குளங்களின் பெயர்களைக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் முன்பு அக் குளங்களினைத் தம்மிடத்தே பெருமையுடன் வைத்திருந்திருக்கும். யாழ்ப்பாணத்திலிருந்து உங்கள் பஸ் பிரயாணத்தை ஆரம்பியுங்கள். வழியில் போகும்போது நீங்கள் கடக்கும் ஊர்கள், குளங்களின் பெயர்களைக் கொண்டிருக்கும். நீங்கள் அவ்வூரில் ஏதாவது குளங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால் இல்லையென்றுதான் பதில் வரும். ஆனால் உண்மையென்ன? அங்கு குளங்கள் இருந்தன. குளங்கள் இருந்ததற்கான சான்றுகள் இன்றும் இருக்கின்றன. எத்தனையோ இராட்சத அணைகள் தூர்ந்து தகர்ந்து காணப்படும் இடங்கள் எல்லாம் குளங்கள் இருந்த இடங்கள்தான். இந்தக் குளங்கள் ஏன் இப்படிப் பாழ்பட்டுப் போயின? குளந்தொட்டு வளம் பெருக்கிய இலங்கையை இன்று அரிசிக்காகக் கையேந்த வைத்தவர்கள் யார்?

சரித்திரம் தரும் பதில் இதுதான்;

அந்நிய நாட்டவர்கள் இலங்கைமீது படையெடுத்தபோது முதற் செய்த வேலை இலங்கையின் விவசாயத்தை அழித்ததுதான். தங்கள் ஆதிக்கத்தை இலங்கையில் என்றும் ஸ்திரப்படுத்தி வைப்பதற்காக இலங்கையின் செல்வத்தை அவர்கள் நாசப்படுத்தினர். அதன் பிறகு இலங்கையைவிட்டுத் தாங்கள் போய்விட்டாலும், தங்களின் நிரந்தர அடிமையாக இலங்கை என்றுமே விளங்கும் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்கு உதவும் விதத்தில் அவர்களின் அடிவருடிகள் இந்த நாட்டிலே அவர்களுக்குப் பெரிதும் உதவி செய்தார்கள்.

ஆனால் உலகத்தின் பல நாடுகளிலும் இத்தகைய வேலைகள் நடைபெற்றதுபோதும் அவையெல்லாம் கடைசியில் பெருத்த தோல்விகளுக்கே உள்ளாகின.

○ சிறுகதை

# எதிரொலி

— நிர்வை பொன்னையன்

அட நாலுமணியாய்ப் போச்சு !

நான் வீட்டை போறதுக்கிடேலை இந்த வேலையை முடிச்சுப் போடவேணும். இல்லாட்டி சரியில்லை.

"நேர்மையாய் வேலை செய்கிற தொழிலாளிக்குத்தான் உரிமை கேக்கத் தகுதியுண்டு."

அண்டைக்கு நடந்த கூட்டத்திலெ எங்கடை தொழிற் சங்கத் தலைவர் சொன்னவர்.

ஏன், நாங்கள் நேர்மையாய்த்தானே வேலை செய்யிறம் பத்துப் பதினைஞ்சு வரியமாய் மாடு மாதிரி உழைச்சுக்குடுக்கிறம் முதலாளிக்கு.

அண்டைக்கு முதலாளி சயிக்கிளிலை ஓடித்திரிஞ்சார் இண்டைக்கு அவர் எங்கடை உழைப்பாலை காறிலை ஓடுறூர்.

நாங்கள் நேர்மையாய் உழைச்சுப் போட்டு உரிமை கேக்க கோவிச்சார் அண்டைக்கு; வேலையிலை இருந்து கலைச்சுப்போடுவன் எண்டு வெருட்டினூர்.

இண்டைக்கு......

இண்டைக்கு ஐஞ்சு மணியோடை வேலை முடிஞ்சுபோம் ஆறு மணிக்கு வீட்டை போய்விடுவன்.

இண்டைக்கு மாத்திரமென்ன, இனி ஒவருநாளும் ஐஞ்சு மணியோடை வேலை விட்டிடும்.

இதுக்கு முந்தி......

இந்தத் தொழிற்சாலை துவங்கின நாளிலையிருந்து நேற்று மட்டும் நிலம் வெளிக்க வேலைக்கு வந்தால் இரவு பத்துமணிகுத்தான் வீட்டை போவம்.

இண்டையிலையிருந்து ஒரு நாளைக்கு எட்டு மணித்தியாலம் தான் வேலை செய்வம்.

சம்பளம் அப்பவும் ஒண்டுதான்; இப்பவும் ஒண்டுதான்.

இண்டைக்கு சம்பளம் !

இந்த மாதம் நூற்றம்பது ரூவாயெண்டால்தான் ஒருமாதிரி சமாளிக்கேலும். ஆனு ?

என்ரை இந்தமாதச் சம்பளத்திலே முதலாளி இருவத்தஞ்சு ரூவா கழிச்சுப் போடுவர். மிச்சம் எழுவத்தஞ்சு ரூவாயை வைச்சுக் கொண்டு என்னத்தைச் செய்கிறது ?

குழந்தைக்கு மருந்து வாங்க வேணும், இரண்டு கிழமை கூப்பன் அரிசிவாங்கின கடன் காசு சங்கக் கடைக்காரனுக்குக் குடுக்கவேணும். அது குடுத்தாத்தான் இந்தக்கிழமை கூப்பன் அரிசி வாங்கலாம். சுந்தரத்திட்டை கைமாத்தாய் வாங்கின பதினஞ்சு ரூவா, சீலை வெளுத்த காசு......

செல்லத்தின்ரை சீலையும் கிழிஞ்சு போச்சு. ஒரு சீலை வாங்க வேணுமெண்டுது.

செல்லம் நீஎன்னைக் கலியாணம் கட்டி என்ன சுவத்தைக் கண்டாய்? நேரத்துக்கு நேரம் சாப்பாடோ நல்லசீலைசட்டையோ ஒண்டுமில்லை. மற்றப் பொம்பிளையளைப் போலை கொயில் குளம், படம் ஒண்டுக்கும் நான் உன்னைக் கனகாலமாய் கூட்டிக் கொண்டு போறேல்லை. உன்ரை என்ன ஆசையைத் தான் நான் பூத்தி செய்தன் ? நீயும் ஒண்டையும் வாய்விட்டுக் கேக்கிறேல்லை.

உண்மையாய் நீ வறுமை பொறுத்தனி செல்லம். ஏதோ நான் கொண்டாறதை வைச்சுக் கொதிப்பிச்சு எங்களுக்கும் தந்து, பிள்ளையளையும் ஒரு மாதிரி வளக்கிருய். என்னுலை உனக்கு என்ன சுவம் ?

நான் என்ன செய்ய ?

நானும் இராப் பகலாய் பாடுபட்டு உழைக்கிறன். இதுக்கு மேலை என்னுலை என்னதான் செய்யேலும் ?

குழந்தையளும் மூண்டாய்ப் போச்சு. அதுகளும் கால்கை வச்சு வளந்தால் சாப்பாடு சீலை சட்டை பள்ளிக்குடச்சிலவு ?

என்ன கடைகெட்ட சீவியம் ?

போனமாதம் முதலாளி அந்த நூற்றம்பது ரூவா கடன் தராட்டி என்ரை மனுசியின்ரை பிள்ளைப் பெத்துச் சிலவுக்கு அந்தரப்பட்டிருப்பன். முதலாளி இரங்கினதாலை ஒரு மாதிரிச் சமாளிச்சன். அதுவும் மாதம் மாதம் என்ரை சம்பளத்திலை இருவத்தைஞ்சு ரூவா கழிக்கிறதெண்டுதான் கடன் தந்தவர். அதாலை இந்தமாதம் இருவத்தைஞ்சு ரூவா போனு மிச்சம் எழுவத்தஞ்சை வைச்சுக் கொண்டு என்ன செய்கிறது ? இது எதுக்குக் காணும் ?

இந்த மாதம் கடனுக்குக் கழிக்க வேண்டாமெண்டு முதலாளியைக் கேட்டால் ? — முதலாளி எப்பிடிச் சம்மதிப்பார் ?

சங்கத்திலை சேர்ந்ததுக்காக எங்களிலை முதலாளிக்குச் சரியான கோவம்.

"என்னடா நேற்றுமட்டும் எனக்கு முன்னாலை நிண்டு கதைக்கப் பயப்பிட்டவாங்கள் இண்டைக்குச் சங்கம் எண்டு சொல்லிக் கொண்டு என்னோடை சரி சமனாய்க் கதிரையிலை இருந்து கதைக்கவாறாங்கள் என்னட்டைக் கூலி வேலை செய்கிறவங்கள். விடுவனே நான் ? இதெல்லாம் அந்தக் கொம்யூனிஸ்ட் காறங்களாலை தான் வந்தது. இதை முளையிலைகிள்ளி எறியவேணும். இப்பவே மட்டம் தட்டாட்டி அவங்கள் என்னை மதியாங்கள். என்ரை மானம் போனபிறகு நான் எப்பிடிமனிசனாய்த் திரிகிறது ? இந்தத் தொழிற்சாலையை மூடினாலும் நான் உவங்களோடை பேச்சு வாத்தைக்குப் போவனே ? போனாப் போகுது. பாப்பம் உவங்கடை கெட்டித்தனத்தை ஒருக்கா."

ஒரு மாதத்துக்கு முந்தி நாங்கள் சங்கத்திலை சேந்து கோரிக்கையள் கேட்ட அண்டைக்கு, எங்கடை தொழிற்சாலைக்கு முன்னாலையிருக்கிற கடை முதலாளிக்குச் சொன்னாராம் எங்கடை முதலாளி.

எங்கடை கோரிக்கையளைத் தராட்டி நாங்கள் வேலை நிறுத்தம் செய்வம் எண்டு தவால் அனுப்பினம்.

'வேலை நிறுத்தம் செய்தால் உவங்களை அடிச்சுக் கலைச்சுப் போட்டு, வேறை ஆக்களை எடுத்து வேலை செய்விப்பன். என்னை ஆரெண்டு நினைச்சுக் கொண்டாங்கள் உவங்கள் ?"

எண்டு மனேச்சரிட்டைச் சொல்லிவிட்டார் அண்டைக்கு

ஆனா நேற்று எங்கடை தொழிற்சங்கத் தலைவரையும் எங்களிலை மூண்டு பேரையும் கதிரையிலை இருத்திப் பேச்சு வார்த்தை நடத்தி நாங்கள் கேட்ட கோரிக்கைகளையும் தாறன் எண்டு ஒப்புக் கொண்டார்.

அதே முதலாளியிட்டை இந்த மாதம் என்ரை கடன்காசைக் கழிக்க வேண்டாமெண்டு கேட்டால் அவர் எப்பிடிச் சம்மதிப்பர்?

அதுவும் அவருக்கு என்னிலை சரியான ஆத்திரம்.

போன வெள்ளிக்கிழமை இரவு நான் சாப்பிட்டுக்கொண்டிருந்தன்.

என்ரை படலைக்கை ஒரு கார் வந்து நிண்டுது.

நல்ல இருட்டு.

ஆரெண்டு பாப்பம் எண்டு நான் விளக்கை எடுத்துக் கொண்டு வெளியாலே வந்தன்.

"சின்னத்துரை"

கூப்பிட்டுக்கொண்டு முதலாளி முத்தத்திலே வந்து நிக்கிறார்.

நான் இவரை இப்பிடி வருவார் எண்டு எதிர்பார்க்கேல்லை.

இண்டைக்குத்தான் முதல் முதல் முதலாளி என்ரை படலையைத் திறந்தவர்.

நான் திகைத்துப் போனன்.

கொஞ்ச நேரம் என்னாலே வாய் துறக்கேலாமைப் போச்சு.

முதலாளியின்ரை முகத்தைப் பார்க்கிறன்.

நெத்தி நிறைய விபூதி. நடுவிலே பெரிய சந்தணப் பொட்டு.

"என்ன முதலாளி இந்த நேரத்திலே..."

"நான் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாலே வாறன். சும்மா உன்னையும் பாத்திட்டுப் போவமெண்டு வந்தன்."

"பொறுங்கோ முதலாளி, புட்டுவமெடுத்துக்கொண்டாறன்."

இல்லை, இல்லை. வேண்டாம் சின்னத்துரை. நான் கெதியாய்ப் போவேணும்."

"அப்ப?"

"எப்பிடி உன்ரை மனுசியும் பிள்ளையளின்ரை பாடு? சுவமாயிருக்கினமே ?"

"ஓம் முதலாளி."

"சிலவுப்பாடு?"

"ஒரு மாதிரிச் சரிக்கட்டிறம்."

"உனக்குக் கஷ்டமெண்டால் இந்தா இதை வைச்சுச் சிலவளி. பிறகு பாப்பம்."

புது நூறு ரூபாய் நோட்டு.

மங்கின விளக்கு வெளிச்சத்திலே தெரியுது.

"வேண்டாம் முதலாளி. என்னட்டை இப்ப கிடக்கிற காசு சிலவுக்குக் காணும்."

"இல்லை, சின்னத்துரை சும்மா வைச்சிரு. குழந்தை பிறந்து பதினைஞ்சு நாளாகுது. ஒரு நோய் நொடியெண்டாலும் பரியாரி வீட்டை கொண்டு போக, மனுசின்ரை சிலவு பாக்க."

ஏன் இப்பிடி முதலாளி வந்து வலியக் காசு தாறார்? ஒரு

நாளுமில்லாத வளக்கமாய்க் கிடக்கு. அண்டைக்கு நான் அந்த நூற்றைம்பது ரூவா வாங்கப்பட்ட பாடு. அவர் சொன்ன வேலை எல்லாம் செய்து, எவ்வளவு நேரம் மண்டாடி, பல்லுக் காட்டி வாங்க வேண்டிக் கிடந்து.

இண்டைக்கு ஏன் முதலாளி இப்பிடி

"முதலாளி நீங்கள் தந்த நூற்றம்பதிலை இன்னும் ஐம்பது ரூபா கிடக்கு. அது போதும் சிலவுக்கு."

"சும்மா கை காவலுக்கு வைச்சிரனப்பா. நீ இப்ப தரவேண்டாம். உனக்கு வசதியான நேரம் தாவன். இல்லாட்டி இதைச் சந்தோஷத்துக்கு தந்ததெண்டு நினையன்."

முதலாளி சொல்லுற மாதிரியிலை இதுக்கை ஏதோ விசயமிருக்கவேணும். ஆனா என்னெண்டு எனக்குப் புரியேல்லை.

"தேவையெண்டால் நான் பிறகு உம்மட்டைக் கேக்கிறன் முதலாளி."

"அப்ப வேறை என்ன, நான் வரட்டே?"

"ஓ. அப்ப போட்டு வாருங்கோ முதலாளி"

"சரி. நான் போட்டு வாறன்"

இரண்டு கவடு எடுத்து வைச்சார்.

"அட நான் மறந்து போனன். ஒரு சின்ன விசயம்."

திடீரென நிண்டு, திரும்பி என்னட்டை வாருர்.

"என்ன முதலாளி"

நானும் அவரிட்டைப் போறன்.

"சின்னத்துரை. நீ அந்தச் சங்கத்தாலை விலகினுல்...

ஓகோ. இதுக்குத்தானே இவர் இஞ்சை வந்து இவ்வளவு நேரமும் இப்படி வளைஞ்சவர்.

எனக்குச் சரியான ஆத்திரம் வந்துது.

கோவத்தை வெளியிலை காட்டாமல் மனதுக்கை அடக்கிக் கொண்டு ஒரு மாதிரிச் சமாளிச்சன்.

"அதென்னண்டு நான் செய்யிறது முதலாளி? நான்தானே முதலாள் சங்கத்திலை சேர்ந்தது."

"அப்ப நான் செய்த உதவியளை நீ மறந்திட்டியே?"

"அது வேறை விசயம் முதலாளி."

"அப்ப நீ அதிலையிருந்து விலகமாட்டியே?"

முதலாளி ஆத்திரத்தோடு கேக்கிறூர்.

"ஏலாது முதலாளி. இதைக் கேட்டு நீர் குறை நினேக்க வேண்டாம்."

கொஞ்ச நேரம் ஏதோ யோசிக்கிறதுபோலை நிக்கிறூர் முதலாளி.

"இனி உனக்கு என்னைத் தேவையெண்டால் நீ சங்கத்திலை யிருந்து விலகிவிடு. இல்லாட்டி..."

அவற்றை குரலிலை வன்மம் தொனிச்சுது.

"அது முடியாது."

நான் திடகாத்திரமாய்ச் சொன்னன்.

திடீரெனத் திரும்பி சொல்லாமல் கொள்ளாமல் படலையைத் துறந்து போட்டு காறிலை ஏறி கார் கதவை அடித்துச் சாத்திஞர்.

கதவை அடிச்ச மாதிரியிலை அவற்றை கோவம் தெரிஞ்சுது. கார் இரைஞ்சுகொண்டு வேகமாய்ப் போய்ச்சுது.

அண்டையிலையிருந்து முதலாளி என்னோடை முகம் குடுத்துக் கதைக்கிறேல்லை. எந்த நேரமும் வெடுசுடெண்டு எரிஞ்சு விழுவர்.

"உங்களுக்கு இருவத்தைஞ்சு ரூபா சம்பளம் கூட்டித் தாறன். உந்தச் சங்கத்திலையிருந்து விலகுங்கோ."

எங்கடை சங்கத்திலை இருக்கிற சிலரின்ரை வீட்டைபோய் முதலாளி கேட்டாராம்.

அவை ஒரு தரம் சம்மதிக்கேல்லை.

"உந்தச் சங்கத்திலையிருந்து நீங்கள் விலகி, எங்கடை ஆக்கள் துவங்கின சங்கத்திலை சேந்தால் உங்கடை கோரிக்கையெல்லாம் தாறன்."

எங்கடை சங்கக் காரியதரிசியிட்டைக் கேட்டார். காரியதரிசி மறுத்துவிட்டார்.

நாங்கள் சங்கத்திலை சேந்ததை அறிஞ்சு சிலநாளையாலை நாலைஞ்சு பேரைப் புடிச்சு முதலாளியும் போட்டியாய் ஒரு சங்கம் துவங்கினூர்.

எங்கடை சங்கம்தான் பெரிசு.

முதலாளி எங்கடை சங்கத்துக்கு ஏன் இவ்வளவு பயப்படுகிருர் எண்டு தெரியேல்லே.

"எங்களிலே முதலாளிக்குச் சரியான ஆத்திரம். அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது? உரிமையளைத் தந்திருந்தால் ஏன் இந்த அலேச்சல் அவருக்கு ?"

எண்டு ஒருநாள் எங்கடை சங்கக் காரியதரிசி எங்களுக்குச் சொன்ஞர்.

"முதலாளிகள் உரிமைகளைத் தொழிலாளருக்கு இலகுவில் கொடுக்கமாட்டார்கள். தொழிலாளர்கள் போராடித்தான் தங்தள் உரிமைகளைப் பெற வேண்டும்."

தொழிற்சங்கத் தலைவர் கூட்டத்திலே சொன்னது உண்மை எண்டு இப்பதான் தெரியுது.

"நானும் தமிழன். நீங்களும் தமிழன். ஏனடா சிங்களவரிருக்கிற உந்தச் சிவப்புச் சட்டைக்காறற்ரை சங்கத்திலே சேந்து என்னைச் சிங்களவனுக்குக் காட்டிக் குடுக்கிறியள் ?"

எண்டு வேலாயுதமாக்களைக் கேட்டாராம் முதலாளி.

"முதலாளி இதுக்கு முந்தி, நீங்கள் தமிழன். நாங்கள் கூலிக்காறர். ஆஞ இப்பதானே நாங்களும் நீங்களும் தமிழன் எண்டு உணருறியள் ? சிங்களவனெண்டால் என்ன, தமிழனெண்டால் என்ன. எங்களைப்போலே கஷ்டப்பட்டு உழைக்கிற ஆக்கள் எல்லாம் தொழிலாளியள்தான். நீங்கள் முதலாளியள் எல்லாம் ஒண்டு எண்டதை சங்கம் உண்டாக்கின பிறகுதான் எங்களுக்குத் தெரியுது"

எண்டு சொல்ல நினைச்சுப்போட்டு பிறகு ஏன் வீணுய் முதலாளியோடை சண்டை பிடிப்பான் எண்டு பேசாமல் போனதாய் வேலாயுதம் சொன்ஞன்.

எங்களுக்குத்தான் சிங்களவன் தமிழன் எண்டு முதலாளி சொல்லுருர். ஏன் அண்டைக்கு மந்திரிமார் யாழ்ப்பாணம் வந்த நேரத்திலே எங்கடை முதலாளியும் மாலேபோட்டவர் தானே- முத்தவெளிக் கூட்டத்திலே. அந்த மந்திரிமாரும் சிங்களவர்தானே.

முதலாளியாக்கள் தங்களைப்போலே பெரிய சிங்களவரோடை சேரலாம். ஏன் நாங்கள் எங்களைப்போல சிங்களத் தொழிலாளியளோடை சேரக்குடாது?

நான் சிலநாளையில் நீர்கொழும்புக்கு லொறியிலை தேங்கா யெண்ணை வாங்கப் போறனுன். எத்தனையோ தமிழாக்களும் தேங்காயெண்ணை மில் வைச்சிருக்கினை. ஆனு அவை சின்ன முதலாளியள். எங்கடை முதலாளி தன்னைப்போலை பெரிய சிங் கள முதலாளியிட்டைத்தான் தேங்காயெண்ணை வாங்கிறவர்.

அவர் செய்யிறது சரி. நாங்கள் செய்யிறதுதான் பிழை யோ?

"உந்த கொம்யூனிஸ்க்காறற்ரை சங்கத்திலையிருந்து விலகி எங்கடை தமிழ்த் தலைவர்மார் வைச்சிருக்கிற எந்தச் சங் கத்திலை சேந்தாலும், அவங்கள் கேக்கிறதைவிட இன்னும் கூட உரிமையள் குடுப்பன்."

முதலாளி தன்ரை கார் றைவருக்குச் சொன்னுராம்.

மற்றச் சங்கங்களிலை சேந்தால் சுவமாய் ஏமாத்தலாம். கொம்யூனிஸ்க்காறற்றை சங்கத்திலை சேந்தால் ஏமாத்தேலா தெண்டு முதலாளிக்குத் தெரியும். அதுதான் அவர் நாங்கள் சேந்திருக்கிற சங்கத்துக்குப் பயப்படுகிருர்.

வேலை முடிஞ்சு மணி அடிக்குது.

சரியாய் ஐஞ்சு மணி

என்ரை வேலையையும் முடிச்சிட்டன்.

கைகாலெல்லாம் எண்ணைப் பசை வழுவழுத்துக்கொண் டிருக்குது.

நாங்கள் மேல்கால்களைக் கழுவிப்போட்டு உடுப்பு மாத் தினம்.

சம்பளம் எடுக்கப் போய் நிக்கிறம்.

ஒவ்வொருதராய் முத்திரையிலை கையொப்பம் போட்டிட்டு முதலாளியிட்டை காசை வாங்குகிருர்கள்.

முதலாளி ஒருதரோடையும் ஒண்டும் பேசல்லை.

காசை எண்ணிக் குடுக்கிருர்.

முதலாளி காசு எண்ணேக்கை அவற்ரை கையிலை போட் டிருக்கிற வைரக் கல்லு மோதிரங்கள் பளபளக்குது.

நான் போய் நிக்கிறன்.

'ஏன் கையொப்பத்தைப் போடன்."

வெடு சுடென்று கத்திருர் முதலாளி.

கையொப்பத்தைப் போட்டன்.

"சரி நீ போ"

வெறுப்போடு முகத்தைச் சுளித்துக்கொண்டு சொல்லிருர் முதலாளி.

நான் நிக்கிறன்.

"ஏன் நிக்கிருய்"

முதலாளி அதட்டுகிருர்.

"காசு..."

"உன்ரை சம்பளக் காசு நூறு ரூபாவையும் கடனுக்குக் கழிச்சாச்சு. அடுத்த மாதம் ஐம்பது ரூபாவையும் கழிக்கலாம். சரி போ."

அவற்றை முகத்திலை ஏளனம்.

என்ன செய்யிறதெண்டு எனக்குத் தெரியேல்லை.

தலையைக் குனிஞ்சு கொண்டு வெளியாலை வாறன்.

என்னண்டு வெறும் கையோடை வீட்டை போறது?

குழந்தைக்கு மருந்து?

கடன்காறர்?

கூப்பன் அரிசி?

"தொழிலாளர்கள் பங்கு செலுத்தக்கூடிய ஒரு கடன் நிதித் திட்டம் ஆரம்பிக்க வேண்டும் அதற்கு முதலாளிமார் முன் தொகை வழங்குதல் வேண்டும்."

எங்கடை இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் முதலாளி மாருக்கு முன்வைச்ச பன்ரண்டு கோரிக்கையளிலை ஒண்டு எனக்கு ஞாபகத்திலை வருகுது.

எனக்குப் பின்னலைவந்த கந்தையா என்னை விலத்திப் போட்டு வேகமாய் நடக்கின்ருன்.

தொழிற்சாலை வாசலிலை எங்கடை சங்கத்திலையிருக்கிற எல்லாரும் கூடி நிண்டு ஆரவாரமாய் ஏதோ கதைத்துக் கொண்டு நிக்கினை.

நான் அவையளுக்குக் கிட்டப் போறன்.

எங்கடை தொழிற்சாலைச் சங்கத் தலைவரிட்டை ஒவருத் தரும் காசு குடுக்கினம்.

என்னைக் கண்டதும் சங்கத் தலைவர் நிக்கச் சொல்லுறூர். அவரின்ரை பார்வை ஒரு மாதிரி இருக்குது.

அவர் எனக்கு அருகில் வாறூர்.

நான் சிரிக்கப் பாக்கிறன். ஆனு ஏலாமல் கிடக்கு.

என்ரை கையைப் பிடிச்சு தலைவர் காசை வைக்கிறூர்.

நூற்றைம்பது ரூவா!

எனக்குத் திகைப்பு.

முதலாளியின்ரை ஐம்பது ரூபாவை இப்பவே கொண்டு போய் அவற்ரை மூஞ்சையிலை எறி.

"மிச்சம் நூறு..."

என்னுலை கதைக்கேலாமை கிடக்கு.

கண் கலங்குது.

"மிச்சத்தை நீ வீட்டை கொண்டு போ."

கெம்பீரமாகச் சொல்லுறூர் தலைவர்.

நான் என்னேடை நிக்கிற தொழிலாளியளைப் பாக்கிறன்.

அவையள் என்னை அன்போடு பாக்கினை.

அவையள் ஒருதருக்கும் பயப்பிடாதவையளைப் போலை தலை நிமிந்து நிக்கினை.

நான் தனியாளில்லை எண்டு எனக்கு இப்ப தெரியுது.

எண்டைக்கும் நாங்கள் ஒண்டுதான்.

---

# புதிய கலாச்சாரம்

*பிற்போக்குக் கலாச்சாரம் நிலப் பிரபுத்துவ வர்க்கத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும், சேவை செய்கிறது. இது அழித்தொழிக்கப்படவேண்டும். இது அழித்தொழிக்கப்பட்டால் அன்றி எந்தவிதப் புதுக் கலாச்சாரத்தையும் கட்டி எழுப்ப முடியாது. புதிய கலாச்சாரமும், பிற்போக்குக் கலாச்சாரமும் ஜீவமரணம் போராட்டத்திற் கலந்துள்ளன. அழிவின்றி நிர்மாணம் கிடையாது, கட்டுப்படுத்தலின்றி விடுதலை கிடையாது. தரிப்பின்றி நகர்வும் கிடையாது.*

O கட்டுரை

# உருவத்தைப்பற்றி

'அம்பலத்தான்'

ஜெயகாந்தனின் படத்தைப் பற்றிச் சில நண்பரிடையே பேச்சடிபட்டுக்கொண்டிருந்தது. "பாட்டு நடனம் இல்லாமல் இங்கிலீஷ் படங்கள்போல அமைந்ததல்லவா? அது நல்லது" என்ற பொதுக் கருத்து உரையாடலில் தொனித்தது. நமது கலை இலக்கிய உலகில் நாளாந்தம் கேட்கும் குரல்களுள் ஒன்று இது. ஆழமற்ற, அர்த்தமற்ற, ஆபாசமான, நிகழ்ச்சிகளும் கருத்துகளும் நிறைந்த தமிழ்ப்பட உலகில் வெறுப்புக்கொண்டு முற்போக்கான எண்ணத்துடன் கூறுவதுபோல அமைந்த கருத்தே மேலே உதாரணமாகக் காட்டப்பட்டது. பல முற்போக்கு எழுத்தாளர்கூட இத்தகைய கருத்தைக் கொண்டிருக்கக்கூடும். வெளித்தோற்றத்திற்கு நியாயமானதாகப்படும் இக்கருத்தின் உள்ளாந்தரம் என்ன?

பாட்டும் நடனமும் திரைப்படத்தின் கட்டமைப்புச் சம்பந்தமானவை; அதன் உருவத்தைப் பொறுத்தவை. மேனாட்டுப் படங்களில் அவை கலந்து வருவனவல்ல என்பதற்காக நமது படைப்புக்களும் அவ்வாறமைதல் வேண்டும் என்பது உகந்த வாதமல்ல நகர வாழ்க்கை நிறைந்த, யந்திரீயமயமான மேனாட்டுச் சமூக வாழ்க்கை, இயல்பாயுள்ள - தொழிலை அடிப்படையாகக் கொண்ட - கிராமிய வாழ்க்கையினின்றும் வேறுபட்டது. கிராமிய வாழ்க்கையில் மலிந்து நிறைந்த பாட்டும் கூத்தும் மேனாட்டு வாழ்க்கையினின்றும் மறைந்துவிட்டது. அதற்குக் காரணம் மற்றெல்லாம் பொருட்களையும் போலவே கலையும் சந்தைப் பொருளாகிவிட்டது. இது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விதி. நம்முடைய நாட்டிலும் அதே பாதையிற் சென்றால் அந்தக் கதியே ஏற்படும். ஆனால் இன்றைய நிலையில் எமது நாட்டு மக்களின் கணிசமானோர் தொகையினருக்குப் பாட்டும் ஆட்டமும் தூரத்துப் பொருட்களல்ல. ஏற்றப்பாட்டிலிருந்து, தாலாட்டுப் பாட்டுவரை இசையின் மிச்ச

சொச்சங்கள் உயிருடன் நிலவுகின்றன. இது உண்மையான புறநிலே. எனவே இவை எமது நாட்டு நாடகங்களிலோ, திரைப் படங்களிலோ இடம்பெறுவது தவிர்க்க முடியாதது; விரும்பத் தக்கது. வியாபார நோக்கமாக அமைந்த பெரும்பாலான தமிழ்ப்படங்களில் இசையும் நடனமும் சீரிய முறையில் கையா ளப்படவில்லை என்று விமர்சனம் செய்யலாமே தவிர, கண்மூடித் தனமாகப் பாட்டும் நடனமும் படங்களில் ஆகாதவை எனக் கூறமுடியுமோ?

ஆனல் பலராற் கூறப்படுகிறது. இதற்குக் காரணம் படைக்கப்பட்ட கலைப் பொருளின் உள்ளடக்கத்தையும், அதன் தேவைகளையும் முதனிலே கொடுத்துப் பார்க்காமல், வெறுமனே நல்ல படம் கூடாத படம் என்ற வரட்டு அளவு கோல்களைக் கொண்டு விமர்சனஞ் செய்வதேயாகும்.

சமூகத்தை மாற்றிப் புதியதோர் அமைப்பை ஏற்படுத்தும் அரசியல் உணர்வுள்ள ஒரு கலைஞன், அந்த உணர்வு வெளிப் படுத்துவதற்கான சகல சாதனங்களையும் நாடுவானே தவிர சாதனங்களின் 'தூய்மை' பற்றி விவாதித்துப் பாழாகமாட்டான். படங்களில் பாட்டும் நடனமும் வேண்டுமா வேண்டாமா என் பது இத்தகைய பயனற்ற பேச்சாகும். விவசாயிகளின் வாழ்க் கையை மையமாக வைத்து ஒரு திரைப் படம் உருவாக்கினல் பாட்டும் நடனமும் தள்ளி வைக்கப்படக்கூடியனவோ? அது மட்டுமல்ல, யுகயுகாந்தமாக பழகு மொழியில் பதிந்த நம்பிக்கை களும் எண்ணங்களுமே மனுக்குலத்தைப் பாதித்து வந்துள்ளன. "அந்தச் சாமி மறந்தாலும், பூமி மறக்காது ஏழையின் நிலேயை" என்று குரல் விட்டுப் பாடும் விவசாயப் பெண்களின் பாட்டில் நம்பிக்கை துலக்குகிறது. அந்த நம்பிக்கையைப் பாட்டுத் தருமாயின் அந்தப் பாட்டைப் படத்தில் அமைப்பதுதான் சிறந் தது. வெள்ளைக்காரனுடைய படத்தில் பாட்டு இல்லை என்று கூறிக்கொண்டு பாட்டை விட்டால், பலியாவது இந்த நம்பிக் கையல்லவா? இத்தகைய எண்ணற்ற உதாரணங்களை எண் ணிப் பார்ப்போமாயின் உருவத்தைப் பற்றிய எண்ணம் எவ் வளவு தூரம் நம்முள் பதிந்துள்ளது என்பது புலனுகும்.

இதைப் போலவே எழுத்திலும், "லா. ச. ரா. பாணி, ஜெய காந்தன் நடை, ரகுநாதனுடைய ஸ்டைல்" என்று நாம் கூறும் போது உருவத்தின் பற்றி ஓங்கி நிற்கிறது. இந்தப் பாணிகள்

'நடைகள்' யாவும் உண்மையில் தனிப்பட்ட கலைஞரின் 'கிறுக்கு' களைப் பற்றியனவே. பழைய தமிழ்ப் புலவர்கள் சிலர் சித்திர கவி, சிலேடைக் கவி முதலியன போட்டார்கள். புலவனின் தனிப்பட்ட சொற்சிலம்பத் திறமைக்கு அவை உதாரணங்களே தவிர, கவிதைக்கல்ல. இன்று ஒரு இளந் தமிழ்க் கவிஞன் சித் திரக் கவி எழுதினால் அது இடைக்காலப் புலவரின் இமிட்டேச னாகவே இருக்கும். அதைப் போலவே முதலாளித்துவ சகாப் தத்தில் மேனாட்டில் உதித்து நம்மிடையே பரவிய கலையுருவங் களையெல்லாம் பக்தி சிரத்தையுடன், தூய்மையுடன் உபயோ கிக்க முனைந்தால் அவற்றின் எச்சமே நமக்கு மிச்சமாகும்.

அதற்கு மாறாக, இன்றைய நாட்டின், சரித்திர நிலையின் அரசியல் பொருளாதாரத் தேவைகளை உணர்ந்து, நாளை உல கத்தின் மக்களை நமது படைப்புக்களின் நாயகர்களாக அமைக் கத் தொடங்கினால், தேவையான கலையுருவங்கள் தாமே வந்த மையும் அதுதான் கலையின் இரகசியமும்கூட. முதலாளித்துவ சமூக அமைப்பில், கலை விலைப் பொருளாக மாறிவிடும்பொழுது வாழ்க்கையில் கதிகலங்கிய எழுத்தாளர் சிலர், ஒதுங்கி நின்று சாவதற்கு முன்னர் 'சாகாத' இலக்கியத்தையாவது படைப் போம் என்று எண்ணுவதுண்டு. ஆனால் சாவைப்பற்றி எண் ணாமல், பெரும்பகுதி மக்கள் சாகாமல் வாழவேண்டுமென்று அவர்கள் மத்தியில் நின்று தனது பங்கைச் செலுத்துபவனுக்கு அமர இலக்கியம் பற்றிக் கனவு காண நேரமில்லை, நினைப்பும் வராது. அப்படி அமர இலக்கியம் படைக்க விரும்புபவரில் பெரும்பாலோர், உருவத்தையே பெரிதாகக் கருதி, அதில் நேரத் தைப் போக்குபவரே. வாழ்க்கை அர்த்தமற்றதாகிப் பாழான சூனியத்தில் தனது படைப்பைப்பற்றி மட்டும் சிந்திக்கும் எழுத் தாளனுக்கு உருவத்துடன் உறவை வளர்ப்பது கலையாக இருக் கும். கலைப் பொருளுக்கு மதிப்பற்ற முதலாளித்துவ அமைப்பில் பாவனையாளருக்குப் புதுப் புதுப் பொருள்கள் விளம்பரப்படுத் தப் படுவதுபோல, கலைஞரும் புதிய புதிய 'டிசைன்களில்' படைக்க முன்வருகின்றனர். இது முதலாளித்துவ உற்பத்தி முறையின் பிரதிபலிப்பே.

முதலாளித்துவ தத்துவச் சார்புள்ள எழுத்தாளரின் தனிச் சொத்தான உருவவாதத்தில் நாம் மறந்தும் மாட்டிக்கொள்ளக் கூடாது. சில வருடங்களுக்கு முன்னர் கோவை இலக்கியம் ஒன்றிற்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. பரிசு வழங்

கும்படி யோசனை கூறிய 'நீதிபதி' சொன்னாராம், "இந்தக் காலத்திலே ஆர் கட்டளைக் கலித்துறை பாடுகிறான். இவன் இந்த யாப்பில் பாடியதற்காகக் கொடுத்தோம்" இதுதான் உருவ வாதத்தின் கண்கண்ட காட்சி; உருவத்தை உச்சிமேற்கொள்ளும் மடமை. கட்டளைதான் பாடவேண்டுமென்று நினைத்திருந்தால், கம்பன் காவியம் தோன்றியிருக்குமா? அல்லது எமது இயக்கத்தின் கவிப்புதல்வன் பசுபதி பாட்டிசைத்திருக்க முடியுமா? பசுபதிக்குக் கட்டளைக் கலித்துறையைவிடக் கருத்தும், அதற்கு அடிப்படையான செயலும், இவை இரண்டிற்கும் ஆதாரமான ஓர் இயக்கமுமே முக்கியமாக இருந்தது. எனவே தான்,

"சிந்தையால் வாக்கால் செம்மைச்
செய்கையாற் புரட்சி உய்க்க,
செந்தமிழ் செங் கொடிக்குச்
சேவகஞ் செய்ய வைக்க
வந்தமா மனிதனை"

வளர்தமிழ்க் கவிஞன் என்று இன்னொரு கவிஞன் தலைசாய்க்க நேர்ந்தது.

முதலாளித்துவக் கண்ணோட்டம் எக்கணமும் எம்மைச் சுற்றி இயங்கிக்கொண்டிருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ நாம் அவற்றில் பலவற்றிற்கு 'எடுபடக்'கூடும். அரசியல் உணர்வுடனும், செயலாற்றும் அநுபவத்தின் மூலமுமே தள்ள வேண்டியதைத் தள்ளிக் கொள்ள வேண்டியதைக் கொள்ளலாம். உருவவாதம் கலைஞரின் பாரிசவாதமாகாமல் இருக்க இதுவே ஒரே வழி.

## வேண்டுவது ...

**மனதில் உறுதி வேண்டும்**
**வாக்கினிலே இனிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**நெருங்கின கைப்பொருள் வேண்டும்**
**கனவு மெய்ப்பட வேண்டும்**
**கைவசமாவது விரைவில் வேண்டும்.**

... பாரதியார்

# சொந்தக்காரன்?

(5)

பெனடிக்ற்பாலன்

சின்னக்கலப்பன் இப்பொழுது முகப் பொலிவுடன் சுறுசுறுப்பாககாணப்பட்டான்.

அவன் பழைய மலையில் இன்னும் கொஞ்ச தொழிலாளர்களுடன் முள்ளுப் போட்டுக் கொண்டு நின்றான். சிதம்பரம் கங்காணி மேற்பார்வை செய்து கொண்டு நின்றான்.

சின்னக்கலப்பனின் முகம் குளிர்மையாக இருந்தது. வாயில் வெற்றிலைபோட்டுக் குதப்பியவனாக நின்றான். வீரமுத்துவின் கலியாணத்தை இனி முடித்து விடலாம். தடை எதுவும் இல்லை என்ற மனப்பூரிப்புடன் கலியாணத்துக்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருந்தான்.

வெய்யில் கடுமையாக எறித்ததினால் வியர்வை கொட்டிற்று.

அவன் தனக்குள்ளே மகனின் கல்யாணத்தின் குதூகலங்களை இரைமீட்டுக்கொண்டே வேலை செய்தான்.

"தொரை உங்களை அழைக்கிறாரு"

ஒபீஸ் பையன் கறுப்பையா மலைக்கு ஓடிவந்து சின்னக்கலப்பனைக் கூப்பிட்டுவிட்டு நின்று மூச்சு வாங்கினான். அவன் ஒபீஸ் இருக்கும் மேல் மலையிலிருந்து ஓடிவந்திருக்கின்றான்.

சின்னக்கலப்பன் நிமிர்ந்து பார்த்தான். தலையில் கட்டியிருந்த துண்டைக் கழட்டித் தோளில் போட்டுக் கொண்டு மலை உச்சியில் உள்ள 'ஒபீசை' நோக்கி நடந்தான். மனம் சலனமுற்றது. அவனுடைய விஷயம் அறிந்த மற்றத் தொழிலாளர்கள், போகும் அவனைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

"நீங்க போங்கண்ணே! தைரியமா போங்க, உங்க பக்கந்தான் நியாயமிருக்கு"

அவர்கள் கொடுத்த நம்பிக் கையுடன் அவன் தெருவில் ஏறி விட்டான்.

சின்னத்துரை ஒருகிழமைக்கு முன் அவனிடம் வந்து காம்ப ராவை உடைக்கச் சொன்ன போது, அவன் அவருக்குச் சொன்ன பதில் ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தது.

பெரியதுரை தன்னை அழைக் கும் காரணத்தைப் புரிந்து கொண்டு, தன்னை அதற்குத் தயார்படுத்தியவாறு ஒப்பீசை அடைந்தான். 'ஆபீஸ் பையன்' அவனை துரையின் அறைக்குக் கொண்டுபோய் விட்டான்.

"சலாமுங்க தொரை"

சின்னக்கலப்பன் குனிந்து கையை நெற்றியில் பக்குவமாக வைத்து. வணக்கம் செலுத் தினன்.

அங்கு அறையின் நடுவில் பளிச்சிடும் மேசைக்கு முன் ஞல் பெரியதுரை பெய்லி இருந் தான். அவனுக்குப் பின்னல் அவன் உருவத்துக்கு நேரே பிரித்தானிய மகாராணியின் பெரிய படம் கம்பீரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

துரை அவனைப் பார்த்த மாத் திரத்தில் ஒன்றும் பேசாது, முகத்தை வெடுக்கி தன் சிவந்த பூனைக் கண்களால், அவனை மேலும், கீழும் பார்த்து சிறுக உறுமினன். கண்களை வெட்டி விழித்தான்.

சின்னக்கலப்பன் கைகளைக் கட்டி பயபக்தியான கோலத் தில் அவரைப் பார்த்த வண்ணம் நின்ருன். மனம் சற்றுத் தயங்கி ஆடிற்று.

"ஏய் உன்னையார் என்னைக் கேக்காம ஃகாட்டத்தில காம் பரா கூட்டச் சொன்னது?"

துரை அறை நடுங்க கனத்த குரலில் சத்தம் போட்டு மேசை யில் குத்தினன். கதிரையைச் சத்தத்துடன் நகர்த்தினன். வழமைபோல் கிளார்க்கை அழைக்காமல் தானே தமிழில் பேசினன. அவனுக்கு சின் னக்கலப்பனைத் தெரியும்.

" ஒருத்தருமில்லீங்க தொ ரே!"

"அப்புறம் என்னைக் கேட் காம என் கட்டினய்?

துரையின் கோபக் கண்கள் அவன் உருவத்தில் முறைப் போடு உருண்டு வந்தன.

"காம்பரா இல்லெயென் ணீங்க தொரே, எம்மவனுக்கு கல்யாணம் அது....

"ஏய் அதை உன்னைக் கேக் கல்ல!"

சப்பாத்துக் கால்களை நிலத் தில் உதைத்துவிட்டு நின்ருன்

துரை. சின்னக்கலப்பன் துரையின் முகத்தைப் பார்த்துவிட்டு குனிந்து நிலத்தைப் பார்த்தவாறு சொன்னான்.

"எம்மவனுக்கு காம்பரா இல்லே. அதனாலே போட்டேனுங்க!

அவன் சாதாரணமாக நின்றான.

துரை பற்களை நறுமிக்கொண்டு எழுந்து நின்றான். அவனுக்கு நெருக்கமாக நடந்து சென்றான்.

"மவனுக்கு கல்யாணம் செய்யனுங்க தொரே! நம்ம காம்பராவில இடமில்லீங்க, புதுசா கலியாணம் கட்டினவங்களுக்கு காம்பரா வேணுமுங்க தொரே!"

அவன் இதைச் சொல்லும்போது, மெல்லிய உணர்வுகள் மனதில் எழுந்து கண்களைக் கலங்க முயன்றன. கண்கள் துரையின் முகத்திலேயே நீதியைத் தேடின.

"ஏய் அதைப்பற்றி நமக்குத் தெரியாது. நீ கேக்காம காம்பரா போட்டது, காம்பரா போட்டது குத்தம். அதுக்கு பத்து ரூபா தெண்டம்"

துரை எழுந்து நின்று கூறிவிட்டு சின்னக்கலப்பனின் முகத்தைப் பார்த்தவண்ணம் நின்றான.

அவன் ஒன்றுமே பேசவில்லே.

துரை எலிசபெக் மகாராணியின் உருவப் படத்தைச் சற்று நேரம் நோக்கியவாறு யோசித்துவிட்டு, அவனைப் பார்த்துச்சொன்னான்.

"நீ காம்பரா உடைச்சுப் போடு! என்ன?"

அவன துரையை நிமிர்ந்து பார்த்தான். உதடுகள் உணர்வில் துடித்தன. கட்டியிருந்த கைகளைச் சற்று இறுக்கினான்.

"அது முடியாதுங்க தொரே!"

திரும்பவும் மகாராணியின் உருவத்தில் கண்களை விட்டு நின்ற துரை சட்டெனத் திரும்பி பற்களைக் கடித்தான்.

"ஏய் எதித்துப் பேசாதை! எதிர்த்துப் பேசாதை! காம்பராவை உடைச்சுப் போட்டு வா வேலைதாறன் - போ!"

துரை மேசையில் வைத்த சுங்கானை எடுத்து வாயில் வைத்து பற்றவைத்துப் புகைவிட்டான். சின்னக்கலப்பன் அவன் விட்ட புகையைப் பார்த்தவாறு,

"அது முடியாதுங்க தொரே! இந்தத் தோட்டத்திலே நாங்க பரம்பரை பரம்பரையாக இருந்து வாறமுங்க; நியாயமெண்ணு ஒண்ணிருக்கு. நமக்கு

## —போரிடு—

பாரதியார் ஒரு சமயம் பாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் சஞ்சீவி இதைப் பாடிக் கொண்டே போருக்குப் புறப்பட்டுப் போகலாம் 'என்று தோன்றுகிறதே' என்றார்.

ஆம்; சோர்வுடன் போர்; பயத்துடன் போர்; அவநம்பிக்கையுடன் போர்; மூடநம்பிக்கை யுடன் போர்; வறுமை யுடன் போர்; செல்வச் செருக்குடன் போர்; தீமை யுடன் போர்; இப்படி எத்தனையோ போர்களுக்கு பட்டாளம் திரட்டி நடத்திக் கொண்டு போக வேண்டியிருக்கிறதே, அதுவே என் தொழில்;' என்றார் பாரதியார்.

—பாரதி சொன்னது

தொழிற்சங்க மிருக்குதுங்க தொரை!"

என்று மனதுள் பயம் எழுந்தாலும், காட்டிக் கொள்ளாமல் மிக அவதானமாகச் சொல்லி முடித்தான்.

அவனைப் பார்க்கவும், அவன் சொல்வதைக் கேட்கவும், துரைக்கு அவனைக் கைத்தடியில் அடிதது விழுத்தும் ஆத்திரம் வருகின்றது. சின்னக்கலப்பனின் வார்த்தைகளை அவனால் பொறுக்க முடியவில்லை.

"யூ புளெடி ரூஸ்கல் கெற் அவுட்!"

சின்னக்கலப்பன் வெளியில் வந்தான். துரை ஆக்கிரத்தில் நடுங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய வெள்ளை முகமும், சிவப்பாகிற்று,

அவன் தலை குனிந்து, நிலத்தைப் பார்த்தவாறு மெள்ள லயத்தை நோக்கி நடந்தான். நெஞ்சம்கனத்து வேர்க்கின்றது. துரை தெண்டம் போட்டதும், வேலை இல்லையென்றதும், காம்பராவைப் பிடுங்கும்படி சொன்னதும், கொள்ளிவால் பிசாசுகளைப்போல் நெஞ்சத்தை வெருட்டி அழுகையும் சோர்வும் எழுந்தன. என்றாலும் தன் பக்கம் நியாயம் இருக்கின்றதென்ற துணிவில் தொழிற்சங்க மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு தோட்டச் சங்கத் தலைவரையும் கூட்டிக்கொண்டு, தொழிற்சங்கக் காரியாலயத்துக்குப் போகும் நோக்கத்துடன் அடி எடுத்து நடந்து கொண்டிருந்தான்.

வெய்யில் கடுமையாக எரித்துக் கொண்டிருந்தது.

### (6)

வீரமுத்து சாப்பிட்டு முடிந்ததும் பீடி ஒன்றை

புகைத்தவாறு மலைப்படிகளால் இறங்கி கோயிலடியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

பூரண நிலவு; குளிராத மனதுக்கும் குழுமை யூட்டும் மங்களகரமான ஜுவாலிப்புடன் மலைமுகடுகளுக்கு அழகைச் சிந்துகின்றது.

அவன் நிலவையும், அந் நிலவால் தேயிலைக் கொழுந்து களின் முகங்களில் பிரகாசித் திருக்கும் பொலிவையும் பார்த்து விட்டு பெருமூச்சு எறிந்தான்.

"அதாரு வீரமுத்தா ?"

"ஆமா !"

"என்னப்பா யோசிக் கிறே ?"

"நாம நிதமும் என்னத் தைப் பறறி யோசிக்கிறோம்' நம்ம வாழ்க்கையைப் பற்றித் தானப்பா ?"

"நீ என்னத்துக்கு யோசிக் கிறே ஒனக்குத்தானே அடுத்த கிழமை கலியாணமாமே ?"

தாயின் இருமலுக்கு, தோட்டத்து டிஸ்பென்சரியில் 'கலவை' மருந்து வாங்கிக் கொண்டு வந்த முண்டன் வீர முத்துவைக் கண்டதும் நின்று கதைத்தான்.

"அது சரிதான்; நம்ம காம் பரா கட்டின கோவத்தில எனக்கு ஐஞ்சு ரூபா தெண்ட மடிச்சிட்டானப்பா, தொரே !" அவன் தேயிலைகளைப் பார்த்த வண்ணம் பீடிப்புகையை விட் டான்.

அவன் தெண்டம்மட்டுமா அடிப்பான்; பற்றுச் சீட்டுக் கொடுத்து தோட்டத்துக்கு வெளியிலே போடவுஞ் சந்தர்ப் பம் பாத்துக் கிட்டிருப்பான்; கவனமா இருந்துக்கோ நான் வார்றன்"

முண்டன், கூறிவிட்டு கோயில் ஓரமாகச் செல்லும் பணிய றோட்டை நோக்கி விரைவாக காலெடுத்து வைத் தான்.

"தார்றுவன், வீரமுத்துக்கு பற்றுச்சீட்டுக் கொடுக்கிறவன். நாமல்லா மென்னத்துக்கிருக் கோம். நம்ம சங்கமென்னத் துக்கிருக்கு அந்த நிமிஷமே ஸ்ரெக் அடிப்போம் !"

தெருக்கரை ஓரமாக உள்ள லய வாசலில் பாக்கியம் நின்று கொண்டிருந்தாள். அவள் பக்டரியில் உள்ள பெட் டிக்காம்பராவில் வேலை செய்ப வள்.

"நாமென்ன அதுக்கு மறுப்பா ? தொரை புத்தியைச் சொன்னேன் !"

இவற்றைக் கேட்ட வீர முத்துவின் மனதில் உறுதியும் தெம்பும், அந்நேரம் அவனுக்கு

வானத்து நிலவும் மிக ஜோதி யாக இருந்தது. உள்ளம் பலம் பெற்று ஆனந்தத்தில் மகிழ பதில் எதுவும் கூருமல் சிரித்த முகமாய் பிள்ளைக் காம் பரா வடிக்கு வந்தான்.

"ஆரு, வீரமுத்தா? வாப்பா; உங்க விஷயத்தைப் பற்றித்தான் கதைச்சிக்கிட் கோம்."

அங்கு வேலுவும், அருணு சலமும், சொத்தி சிலம்பனும் பேசிக் கொண்டு நின்ருர்கள்.

"எனக்கு புதுக் காம்பரா வில் கலியாண நடக்கப் போற தைப் பற்றித்தான் கதைச் சிருப்பீங்க!" வீரமுத்து சிரித் துக் கொண்டு சொன்னுன்.

"நம்ம கலப்பண்ணே செய்த வேலைதானப்பா நமக் கெல்லாம் புது உஷாரைக் கொடுத்திருக்கு!" வேலு அவ னுடைய தோளில் அடித்து விட்டுச் சொன்னுன்.

"ஆமாப்பா"

அதை அருணுசலமும், சொத்திச் சிலம்பனும் அனும வித்தார்கள்.

"கொன்பரன்ஸுக்கு தேதி குறிச்சிருகுதுதானே?"

அருணுசலம் ஆவலோடு கேட்டதற்கு வீரமுத்து 'ஆமா' என்று தலையாட்டினுன்.

"கொன்பரன்சில் நம்ப பக்கந்தான் தீரும். நம்பபக்கந் தானே நியாயமிருக்கு வேறு உறுதியாக கையடித்துச் சொன் னதைக் கேட்ட சிலம்பன் சிரித் தான். பின்பு தணிவான குர லில் சொன்னுன்; "நம்ப பக்கம் எப்பத்தான் அநியாயம் இருந் திருக்கிறது. நாம் இந்த தோட் டத்துக்கு என்ன அநியாயத் செய்கிறோம். உழைச்சுச் சாகி றதைத் தவிர?

எல்லோரும் அவனுடைய கேள்வியில் மனச்சலனமுற்று சம்பாதிக்கும் உணர்வோடு மௌனமாக நின்ருர்கள்.

"அப்படிக் கேளப்பா"

விரமுத்து அவனைத் தட் டிக் கொடுத்தான்.

"அதுசரி, கொன்பரன்சில், தொரை பக்கந்தீர்ந்தா என்ன நடக்கும்?" அருணுசலம் சந் தேகத்தோடு மற்றவர்களைப் பார்த்துக் கேட்டான்."

"தீர்ந்தா என்ன நடக் கும்? தொரை கட்டின காம் பராவை உடைப்பான்!"

வேலு, கூறிய வார்த்தை கள் வீரமுத்துவின் மனதை ஊடுருவின. அவன் முகம் கறுப் பது இரவில் தெரிகிறது.

"உடைச்சா அடுத்தநாள் வீரமுத்துவுக்கு காம்பரா கொடுன்னு 'ஸ்ட்ரைக்' போட வேண்டியதுதான்; வேறு என்ன வழி?"

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு, வீரமுத்து மௌனமாக நின்றான்.

"அப்படி ஒண்ணும் நடந்திடாது, தீர்ப்பு நம்பபக்கந் தான்; அதிலெ சந்தேகமில்லெ அப்படின்னு காம்பரா கொடுத்துப்புட்டுத்தான், கட்டின காம்பராவ உடைக்கணும். வீரமுத்து நாங்க தலைவரை கண்டிட்டு வர்றம்"

வேலு, தைரியமான தொனியில் கூறியதும் வீரமுத்துவின் முகம் பொலிவடைந்தது. வேலு அருணாசலத்தையும் சிலம்பனையும் அழைச்சுக் கொண்டு, தலைவர் அண்ணாமலை இருக்கிற லயத்தை நோக்கி சென்றார்கள்.

காம்பராவை தரை உடைக்க முடியாதென்பதில் மனம் பலம் பெற்றது. பிள்ளைக் காம்பராச் சுவரோடு சாய்ந்து, நிலவின் திவ்வியமான ஒளியில் வானத்தைப் பார்த்த வண்ணம், தன் திருமண வாழ்வின் இன்பங்களை நினைக்கத் தொடங்கினான்.

பிள்ளைக் காம்பராவுக்குச் சற்று, தள்ளி உள்ள அம்மன் கோயில் வாசலில் இளம் பையர்கள் சிலம்படி பழகிக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் உள்ள வாசிகசாலையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வீரமுத்து அந்த யோசனைகளின் தொடர்போடு கோயில் பக்கமாக கண்களை மெல்ல விட்டான்.

கோயிலின் வடக்கு திசையாக உள்ள வாசலில், இருள் ஒதுக்குப் பக்கமாக ஒரு உருவம், கட்டியிருந்த சாறத்தால் உடலை இழுத்து மூடி, தலையை முழங்காலில் கவிட்டு குந்தி இருந்தது. வீரமுத்து அந்த உருவத்தை பார்த்ததும், தன் நண்பன் பழனியாக இருக்கும் என்று எண்ணி அங்கு சென்றான்.

'யாரப்பா இது பழனியா?'

பக்கத்தில் நின்று கேட்டும் பதில் இல்லை. அவன் குந்தி இருந்து தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

"அடைக்கலம்!"

வீரமுத்துவின் மனம் கலுங்கிப் போச்சு. அடைக்கலத்தின் கண்கள் கண்ணீரில் மினுங்கின.

அவனுடைய தாய் ஒரு கிழமைக்கு முன்னுற்தான் இறந்து விட்டாள். அவனுக்கும் அவனுடைய சின்னத்தம்பி கேசவனுக்கும் ஆதர்சமாக அவள் இருந்தாள்.

வீரமுத்துவின் கைவிரல், அவனுடைய தோளைவருடிக் கொண்டிருந்தன.

"ஏனப்ப அழுவுறே? ஆயாவை நெனச்சிட்டியா?" அடைக்கலம், அவன் முகத்தையே பார்த்தான்.

"அடைக்கலம் ஏனப்பா அழுறே:" வீரமுத்து, அவனைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"நாங்க இந்த தோட்டத்தில்தானே புறந்தோம்?" அவன் இக்கேள்வியை, அந்நேரம் அடைக்கலத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

"ஆமா!"

"எங்க அப்பன், ஆயா எல்லாரும் இங்கதானே புறந்தாங்க?"

"ஆமா!"

"இந்த தோட்டம் எந்த நாட்டில இருக்கு?"

"இலங்கையிலெ!"

"அப்போ, எங்க தாய் நாடு எது?"

"இலங்கைதான்!"

"நம்மையெல்லாம் ஏனப்பா இந்தியாவுக்கு அனுப்பப் போறுங்க? நாங்க இந்த நாட்டுக்கு என்ன துரோகத்தைச் செய்தோம்? கொள்ளை அடிச்சுப் போற வெள்ளைக்காரனை இங்க இருக்க விட்டுட்டு நம்மை ஏனப்பா கலைக்கிறுங்க?"

அடைக்கலத்தின் நெஞ்சம் பேசியது. அந்தக் கேள்விகளால் கதிகலங்கி, அவற்றின் உள் மயமான உணர்ச்சிகளால் தானும் தாக்குப்பட்டு பதிலே வராமல் வீரமுத்து இருந்தான்.

"வீரமுத்தண்ணே என்னைப் பாரு! எனக்கு இருபத்திநாலு வயசாப் போச்சு, தொரை பேர் பதியமாட்டேங்கிறன். வேலே இல்லியாம். நம்ம வயிறுவளர்த்த ஆயாவும் தேயிலேச் செடிக்கு இரையாப் போச்சு; தொரை அடுத்த மாதம், காம்பராவைக் காலிபண்ணிணு நாங்க எங்கை போவம்? இந்த நாட்டிலுமிடமில்லே; இந்தியாவுக்கனுப்பிணு ஐயோ, நமக்கு அங்கு ஒருத்தருதமில்லண்ணே?"

"அடைக்கலோம்!"

நெஞ்சம் உணர்வுகளின் நெருக்கத்தால் தாங்க முடியாமல் வீரமுத்து கத்தினுன்.

"என்னப்பா நீ சொல்றே?"

அடைக்கலத்தின் இதயத்தோடு, வீரமுத்து ஒன்றிப் போய் என்ன கேட்பதென்றே தெரியாமல் கேட்டான்.

"அண்ணே எனக்கு பயம்மா இருக்கு! நமக்கு என்ன கதி அண்ணே இருக்கு? நாளைக்குத்

தெருவிலே நின்னு கள்ளத் தோணி எண்ணு புடிச்சடைப் பான். சத்தியமாச் சொல்றன்; எனக்கு கடலே தெரியாதண் ணே?"

"டேய் அடைக்கலோம்! நீ ஏண்டா பயப்படணும். நாங்க ளும் உன்னைப் போலத்தானடா இந்த நாட்டைதாண்டா தெரி யும். நீ பயப்படாதே! நீ அனுதை யில்லடா!"

வீரமுத்து எழுந்து அவன் கைகளைப் பிடித்து இழுத்தான்.

"எழுந்திரடா! சாறத்தைக் கட்டிக்கோ!"

அடைக்கலம் எழுந்து நின்று சாறத்தை அரையில் கட்டினுன்.

வீரமுத்து, அவனுடைய கண் களில் உள்ள கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கூறினுன்;

"நீ ஏண்டா பயப்புர்ருய்? நாங்க இந்த நாட்டில் தாண்டா வாழப் போறம். எங்களுக்கு இதுதாண்டா தாய்நாடு; வா வீட்டுக்கு போவம்; குழந்தை மாதிரி அழுவுறே வா!"

வீரமுகது, அடைக்கலத்தைக் கையில் பிடித்து தன் வீட்டுக் குக் கூட்டிக் கொண்டு நடந் தான்.

இரு உளளங்களும், உள்ளே விடை காணுத உணர்வுகளால் அமைதி சூழ்ந்துகொண்டிருந் தன (தொடரும்)

# வெள்ளையனே!

பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளை கொண்டு
போகவோ? —நாங்கள்-சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ? ஆண் பிள்ளைகள்
அல்லமோ? - உயிர் - வெல்லமோ?
ஒற்று மைவழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம்; - நன்கு - தேர்ந்திட்டோம்;
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவுறோம்; சித்தம் - கலைவுறோம்.

சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ? - ஜீவன் - ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மஹாபக்தி
ஏகுமோ? - நெஞ்சம் - வேகுமோ?

—பாரதி

# "ஓவியன் கண்ட காவியம்"

அ. ஜெயரெத்தினம்.



[கொலம்பகே குணசிறி]

26 வயது நிரம்பிய இளைஞர் குணசிறீ கொலம்பகேயின் ஓவியக் கண்காட்சி ஒன்று கொழும்பு கலாபவனத்தில் ஆகஸ்ட் 5, 6, 7, 8, 9, 10, 11, 12-ம் திகதிகளில் நடைபெற்றது.

இச் சித்திரக் காட்சி பல வகைகளில் இலங்கையில் இது வரை நடந்திருக்கக்கூடிய சித்திரக் கண்காட்சிகளிலிருந்து மாறுபட்டும், ஒரு புதிய திருப்பத்தை உடையதாகவும் அமைந்திருக்கிறது. இக்காட்சியில் வைக்கப்பட்டுள்ள நூறு ஓவியங்களும் ஓவியன் மனதில் வெறுமையாகத் தோன்றியவையல்ல; பிறிதொன்றை அனுபவிக்கும்போது, படிக்கும்போது தோன்றியவையே. இந்நூறு ஓவியங்களும் எழுபத்தைந்து கவிஞர்களின் நூறு கவிதைகளைப் படித்தபோது ஓவியனுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

'இந்தச் சித்திரக் காட்சியில் இடம்பெற்றுள்ள ஓவியங்கள் நான் படித்து ரசித்த சில படங்களுக்குப் 'போட்ட' வெறும் படங்கள் அல்ல; அவற்றைப் படித்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி அனுபவங்களின் பிரதிபிம்பங்கள் இவை. கவிதை

களை வாசித்தபோது என் உள்ளம் கொண்ட பிரமைகளைத் தூரிகையும் வர்ணமும் எழுது கோலும் மசியும் கொண்டு 'சுயப் போக்கில்' ஓவியங்களாக்கி இருக்கிறேன்' என்று ஓவியர் கொலம்பகே கூறுகிறார். இதுவே இதனுடைய சிறப்பாகும். சகோதரக் கலைஞர்களின் படைப்பை, கவிதையை இன்னொரு கலைஞர் தனது கலைச் சாதனமாகிய ஓவியத்தின் மூலம் புதிய ஒளியும் அழகும் பெறச் செய்துள்ளார். இவ்வகையில் இலங்கையில் ஓவியத்துறையில் இது புதிய முயற்சியாகத் தென்படுவதால் இதை ஒரு திருப்பமாகவே கொள்ளலாம்.

ஆனால் கவிதைகளுக்கும் புதிய அழகைக் கொடுத்துள்ளார் என்றபடியால் கொலம்பகேயின் ஓவியங்களை, கவிதைகளுக்கும் கொடுத்த வெறும் விளக்கப் படங்கள் என்று கொள்ளுதல் தவறாகும். கவிதைகளுக்கு விளக்கப் படங்கள் 'கல்கி' போன்ற பத்திரிகைகளின் ஆண்டு மலர், தீபாவளி மலர்களில் வந்திருக்கின்றன; கவிதைகள் அட்டைப்படங்களாகவும் தீட்டப்பட்டுள்ளன. அவை வெறும் விளக்கப் படங்களே. ஓவியர் கொலம்பகே அவற்றுக்கு மேலாகச் சொல்கிறார். அவர் கவிதைகளை ஓவியங்களால் விமர்சிக்கிறார். கவிதையில் சொல்லப்பட்டதை அவர் ஓவியமாக்கவில்லை. கவிதையில் எதைத்தான் விளங்கினாரோ, அதையே ஓவியமாக்கியிருக்கிறார். தமக்குப் பிடிக்காத சில கவிதைகளைத் தமது ஓவியங்களால் அவர் கிண்டல் செய்திருப்பதை உதாரணத்துக்கு இங்கு சொல்லலாம்.

"நான் படித்து வாசித்த சில கவிதைகளின் இந்தச் சித்திரங்கள், ஓவியன் ஒருவனின் உள்ளார்ந்த பார்வை வாயிலாக உங்களுக்கு மற்றொரு பரிமாண நோக்கை தர உதவும் என நம்புகிறேன்". எனவேதான் இச்சித்திரக் கண்காட்சியை முக்கிய ஒரு நிகழ்ச்சியாகக் கருதவேண்டியிருக்கிறது. இதுவரை ஒரு கலையை, இலக்கியப் படைப்பை எழுத்தைக் கொண்டே விமர்சித்து வந்திருக்கிறார்கள். எழுத்துத்தான் விமர்சனக் கருவியாகப் பயன்பட்டிருக்கிறது. ஓவியர் கொலம்பகேயின் கையிலோ ஓவியமே விமர்சனக் கருவியாகப் பயன்பட்டிருக்கிறது. இப் புதிய முயற்சியில் ஓவியர் பெற்ற வெற்றியை ஆராய்வதைவிட, இலங்கையின் எதிர்காலத்துக்கு அவர் நல்லதொரு அத்திவாரத்தை இட முயற்சிக்கிறார் என்று கூறுவது பயன் உடையதாகும்.

ஓவியங்களுக்கான கவிதைகளை, எந்த அர்த்தத்திலும் 'பிரதிநிதித்துவ' பூர்வமாகத் தான் தேர்ந்தெடுக்கவில்லை என்று ஓவியர் கூறிய போதிலும், அதிலும்கூட ஒரு தனிச் சிறப்பு இருப்பதை ஈழத்து இன்றைய நிலையில் நாம் பாராட்ட வேண்டும். இலங்கையின் தேசியத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் (கவிதைகளின் தார தம்மியம் ஒருபுறம் இருக்க) பெரும்பாலான சிங்களக் கவிதைகளுடன் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தனிமனிதர்களாகிய மூவரின் முயற்சியாக (சில்லையூர் செல்வராசன், சிறில் பி. பெரேரா, குணசிறி கொலம்பகே) இது அமைந்தாலும், ஈழத்தில் சிங்கள தமிழ்க் கலைஞர்கள் எழுத்தாளர் இடையே ஐக்கியத்தை உருவாக்கும் பாலமாக, கண்டியில் நடந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கண்டி இளங் கவிஞர் சங்கம் ஆகியவற்றின் கூட்டு மகாநாட்டுக்குப் பின், செயல் ரூபத்தில் இக்காட்சி அமைவதை நிச்சயமாகக் கூறலாம். ஆயினும் மனவருத்தத்துடன் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். சிங்களப் பத்திரிகைகள் எல்லாம் இந்த ஓவியக் காட்சி பற்றி முழுப்பக்க அளவில் எழுதிய அதே வேளையில், தேசிய ஐக்கியம், தேசிய ஐக்கியம் என்று உச்சக் குரலிற் கத்தும் ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு வரிகூட எழுதவில்லை. விஷயம் என்னவெனில் உண்மையான தேசிய ஐக்கியத்தை அவை விரும்பவில்லை. ஆகவே அப்பத்திரிகைகள் எழுதவில்லை என்று மனம் வருந்துவதும் மடைத்தனமே!

தேசிய ஐக்கியத்தைச் செயல் ரீதியில் காட்டிய கொலம்பகே ஒரு சர்வதேசிய வாதியாகவும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் பரம்பரையில் துணைவனுகவும் விளங்குகிறுர். தமிழ் சிங்களக் கவிதைகளை மட்டுமல்ல ஆங்கில, பிரஞ்சு ஆகிய ஏனைய உலக மொழிக் கவிதைகளையும் அவர் தமது ஓவியங்களால் விமர்சித்துள்ளார்.

கவிதைகள் ஓவியரின் சொந்தமல்ல என்பதாலும், சிறு வயது முதற் கொண்டே அவர் நினைவில் உள்ள கவிதைகளுக்கு ஓவியங்கள் வரைந்துள்ளார் என்பதாலும் ஓவியங்கள் வெளிப்படுத்தும் உள்ளடக்கம் அல்லது கருத்து ஒருமைத் தன்மையுடையதாக இல்லை. காதல், உழைப்பு, துன்பம், மனிதாபிமானம் போன்ற பல விடயங்கள் வந்துள்ளன.

வியட்நாமில் 'பத்திரிகைக் குவியல்களிடையே எலும்புக் கூடு' கண்டு மனித இனம் இவ்வளவு மலிவு ஆகிவிட்டதே என்று மனிதாபிமானம் பேசுகின்ற அவரே, பிறிதொரு ஓவியத்தில் 'பல்லவர் வாழ தனி ஒருவர் உயிர் கொடுத்தார்' என்று போராட்ட அறைகூவலும் விடுக்கிறார்.

" நறவத் தேனி நலிந்து நலிந்து
சிறுச் சிறு துளித்துளி சேர்த்துச் சேர்த்து வைத்த
அமுதத் தேனெலாம் எவரோ கவரப்
பறிகொடுத்து அலமரும் பான்மை
என்னென்னே !"

என்ற கவிதையில் தேனி சேர்த்த தேனைப் பிறர் கவரும் செயல், ரப்பர்த் தொழிலாளி சிறுகச்சிறுக உழைத்த உழைப்பை தோட்ட முதலாளி சுரண்டிக் கொண்டிருக்கும் செயலாக ஓவியருக்குப் படுகிறது. பூச்சியைப் பல்லி பிடித்துண்ணும் சிறு விஷயம்கூட பொறுக்க முடியாத அநீதியாக அவருக்குப் படுகிறது. ஆனால் இப் பிரச்சினைகளுக்கு அவர் கொடுக்க முனையும் தீர்வு புத்த சமயம் அவர்மேல் கொண்டுள்ள செல்வாக்கைக் காட்டுகிறது; அவரது பெரும்பாலான ஓவியங்களில் இவ்வுலகப் பந்தங்கள் துன்பங்களாகவும் துன்பங்களால் விரக்தியுமே தென்படுகின்றன. இவ்வுலகத்திலேயே விடிவு உண்டு என்பதை ஓவியர் வற்புறுத்தியிருந்தால், அவர் மேலும் வெற்றியடைந்திருப்பார்.

இத்தகைய காட்சியை ஒழுங்கு செய்த அமைப்பாளர்கள் சில்லையூர் செல்வராசனையும் சிறில் பி. பெரேராவையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். கவிதைகள் யாவும் மும்மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளமை அமைப்பாளர்கள் எடுத்த பெரும் சிரமத்துக்குச் சான்றாக விளங்குகிறது.

இக்காட்சி செப்டெம்பர் மாதம் 1-ம் 2-ம் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனவும் அறிய வருகிறது.

---

## எச்சரிக்கை

நாம் எந்த நேரத்திலும் போராட்டத்தில் இறங்குவோம் என்று இந்திய அரசாங்கத்துக்கு பூனைகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. காரணம் இந்திய அரசாங்கம் பூனைகளின் முக்கிய உணவான எலிகளை மனித உணவாக மாற்ற ஆலோசிப்பதுதான்.

O சிறுகதை

# வஞ்சினம்

**செ. கணேசலிங்கன்**

**ப**ள்ளத்தாக்குப் பகுதியில் கொழுந்து பறிக்கும் பெண்களின் கலகலப்பான சிரிப்பொலி கேட்டபோது நல்லநாயகத்தால் பொறுக்க முடியவில்லை. தனது வருகையைப் பார்த்து விட்டார்களா, பார்க்கவில்லையா என்பதை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. பார்த்துச் சிரித்தார்களாயின் அது விட்டு விடக் கூடிய விஷயமல்ல. பார்க்காது தமக்குள்ளே சிரிப்பதாயினும் வேலை நேரத்தில் இவளவைக்கு என்ன சிரிப்பு... ? தான் தோட்டத் துரை என்ற தன்மான உணர்வு தலையெடுத்தது. மனதில் சீழ் பிடித்திருந்த முன் சில நாளாக உலுத்திய போதும் இந்தக் கேலிகளுக் கெல்லாம் இடங் கொடுக்கப் படாது என்று எண்ணிக் கொண்டார்.

தேயிலைச் செடிகளினூடே மலையின் முதுகில் சிற்றுரு பிடித்த வழிபோலே ஓடிக் கொண்டிருந்த குறுகிய தெருவில் நின்றபடியே கீழே நோக்கினர். 100 யாருக்குமேல் முன்புறமாக, 200 அடிவரை கீழே மலைச்சரிவில் எட்டுப் பெண்கள் கொழுந்து பறித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கங்காணியைக் காணவில்லை. தோட்டம் நடத்தும் சீர் இப்படி யிருக்கிறது, கண்டக்டருக்குப் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார். என்னை மட்டும் கோழையாக்கி, நாலைந்து நாட்களுக்கு தலைகாட்ட வேண்டாம் என்று சொல்லி விட்டி வீட்டிலே படுத்துக் கிடக்கிருரோ ?

வாயிலே புகைத்துக் கொண்டிருந்த பைப்பை எடுத்து எரிந்த சாம்பலைக் கொட்டி அணிந்திருந்த காக்கி சட்டைப் பொக்கற்றுக்குள் போட்டுக் கொண்டார். மணிக்கட்டுவரை நீண்டிருந்த டிரலீன் சட்டையின் கைப்பகுதியை மடித்தபடியே முன் நடந்தார். சிந்தனை வலுப்படைய கால்கள் மெதுவாக முன்னேறின. மூன்று நாட்களின் முன் கண்டக்டர் சொன்ன வார்த்தைகள் மீண்டும் அவர் காதில் ஒலித்து, சிந்தனையைத் தாக்கியது, அச்சமூட்டியது.

காளியம்மா "செத்ததாலே தோட்டத்திலே கொஞ்சம் ஆத்திரப்படுறுங்கள் கொஞ்ச நாளைக்கு நீங்க தனிய தோட்டப் பக்கம் சுற்றிப் பார்க்க வேண்டாம். நான் எல்லாம் பாத்துக் கொள்ளுவன்"

அவனின் துணிச்சல் சிறிது குறைந்தது. உடல் பூராவும் ஒரு கணம் குளிர்ந்த இரத்தம் ஓடியது. பள்ளத்தாக்கு வழியாக மெல்லிய தூறல் காற்று வீசி காதுகளைச் சிலிர்த்தன. தளர்ந்திருந்த 'மவ்விளரை' எடுத்து கழுத்தை இறுகச் சுற்றிக் கொண்டார். தொப்பியை சிறிது நிமிர்த்தியபடி அந்தப் பள்ளத்தாக்குப் பகுதியை ஒரு நோட்டம் போட்டார். அடுத்த கூட்டம் கால் மைல் தொலைவில் கொழுந்து பறிப்பது தெரிந்தது. கப்பாத்து வெட்டுபவர்களும், முள்ளுப் போடுபவர்களும் மிகத் தொலைவிலேயே தெரிந்தனர்.

மீண்டும் அதே சிரிப்பொலி. அவரது மிடுக்கையும் மானத்தையும் பரிசோதிப்பதாக தானே எண்ணிக் கொண்டார். பொறுமையை வரவழைக்க முயன்றுர். கங்காணி, கண்டக்டர் எவராவது வருகிறுர்களா என்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை சுற்று முற்றும் பார்த்தார்.

நான் தவறு எதுவும் செய்யாத போது படிப்பறிவே இல்லாத கூலிப்படைகள் காளியம்மா செத்ததற்கு என்மேல் ஏன் பழிபோட வேண்டும்? நான் தவறு செய்தேனு? நான் இவர்களுக்குப் பயமா? மூன்று நாட்களாக நான் ஏன் காரையே வெளியே எடுக்கவில்லை? பயந்து தானே! பயப்படுவதற்கு நான் தவறு செய்தேனு?

பள்ளத்தாக்கை நோக்கி இறங்கும் ஒற்றையடிப் பாதை நெருங்கிக் கொண்டிருந்தது. நல்ல நாயகத்தின் இதயம் போராடிக் கொண்டிருந்தது. நெஞ்சம் விஞக்களிடையே சஞ்சலப்பட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காளியம்மாவிற்கு குழந்தை பிறந்து மூன்றும் நாள். திடீரென காய்ச்சலும் சன்னியும் கண்டு விட்டது. மாரன் அப்போதிக்கரியிடம் ஓடிஞன். அவர் இரத்தினபுரிக்குப் போய்விட்டார்; இரவு வரலாம் என்று வீட்டிலே தெரிவித்தார்கள். தோட்டத்து மருத்துவிச்சியிடம் ஓடிஞன். அவளும் வெளியே பலாங்கொடைக்கிப் போய் விட்டாள் உடனே ஆசுபத்திரிக்கு அழைத்துச் செல்ல லொறியும் இல்லை.

பழுது திருத்தம் செய்வதற்காக பலாங்கொடைக்குப் போய் விட்டது. பட்டணம் போய் கார் பிடித்து வருவதற்கும் பிந்தி விட்டது. பொழுது கருகி விட்டது. நல்லநாயகம் ஒருவர் தான் காப்பாற்றலாம் என்று துரை பங்களாவிற்கு ஓடினுன். அங்கு ஆங்கில இசையொலியும் விருந்தார்ப்பாட்டங்களும் நடை பெற்றுக் கொண்டிருந்தன.

அவரது இன்ப வேளையை அவன் கெடுக்க வருவது போல உணர்ந்தார்.

"முடியாது அப்போதிக்கரி வந்து விடுவார். இல்லாவிட்டால் காலையில் லொறியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம்."

மாரன் மனச்சோர்வோடு திரும்பி வந்தான். காளியம்மாவின் நிலமை மோசமாகிக் கொண்டு வந்தது. வழி பார்த்துக் கொண்டிருந்த அப்போதிக்கரியும் காணவில்லை. அயல் லாயத்தில் இருந்தவர்களெல்லோரும் சூழ்ந்து கை மருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். எவ்வித பயனுமில்லை. பச்சைக் குழந்தை வேறு கதறிக் கொண்டிருந்தது. மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது.

அடுத்த பகுதி லயத்தில் செய்தி கேட்டு அறிந்த வேலப்பன் ஓடிவந்தான். நிலமையை அறிந்த போது அவன் இரத்தம் கொதித்தது. துரை பங்களாவிற்கு உடனே மாரனையும் அழைத்துக் கொண்டு சென்றுன்.

விருந்து முடிந்திருந்தது. அழைத்து வந்த விருந்தாளிகளை நகரத்திற்கு அழைத்துச் செல்ல நல்லநாயகம் தயாராகிக் கொண்டிருந்தார்.

வேலப்பன் நயமாக, நிலமையை விளக்கிக் கேட்டான். அவர் அசையவில்லை.

"இது ஒரு பச்சைபிள்ளைத்தாச்சியின் உயிர்ப் பிரச்சனை. நீங்கள் கரோட்ட முடியாவிட்டால் நான் டிரைவர் கொண்டு வாரேன்"

"என் காரைத் தர முடியாது"

"இது கம்பனிக் கார்"

வேலப்பன் ஆத்திரத்தோடு சொன்னுன். நல்லநாயகத்தின் இதயத்தில் அடித்தது போன்றிருந்தது. அவரின் கோபம் அதிகரித்தது.

"இது கம்பனி எனக்குத்தந்த கார். கூலிகளை ஏத்தவல்ல"

"எப்படியாயினும் கம்பனிக்குப் பயன் படுவதற்காகத் தந்த கார்தானே. துரைக்குப் பயன்படும் கார் கம்பனிக்காக உழைத்து வரும் தொழிலாளிக்குப் பயன்படப்படாது என்று கம்பனி சொல்லியாதந்தது? கடைசியாக உன் மனுஷத்துவத்தையும் எம் உரிமையையும் வைத்து சங்கச் சார்பாக கேட்கிறேன். கார் தருவாயா, இல்லையா?

"முடியாது"

"காளியம்மாவிற்கு ஏதாவது நடக்கட்டும் பார்க்கலாம். உந்தக் காரின் உரிமை பற்றியும் கம்பனியோடு பேசி நாங்கள் முடிவெடுக்கிறோமா இல்லையா என்று பார். அப்போதிக் கூரிக்கும் லீவு கொடுத்து அனுப்பி விட்டீர்கள். உந்த அதிகாரத்தோடு நீயும் எத்தனை காலம் இங்கு இருக்கப் போகிறாய் என்று பாப்பம்."

வேலப்பன் தன் ஆத்திரத்தைக் கொட்டி விட்டு மாரனுடன் திரும்பினான். பலாங்கொடைக்கு இரவிரவாக ஒருவனை கார் பிடித்து வரும்படி அனுப்பினர். அதிகாலையில்தான் கார் கொண்டுவரமுடிந்தது.

கண் விழித்துக் காத்திருந்தவர்கள் யாவரும் காரைக் கண்டதும் ஆரவாரித்தனர். காரில் ஏற்றமுன் காளியம்மா வாய்புலம்பியபடியே போய்விட்டாள்.

அன்றைய சங்கொலி மரண ஒலியாக எங்கும் கேட்டது.

செய்தி அறிந்து ஆத்திரமடைந்தவர்களெவரும் பேர் போடப் போகவில்லை. காளியம்மாகூட்டத்தைச் சேர்ந்த பெண்களெல்லோரும் கதறினார்கள். அவர்களின் நெஞ்சுகள் வெந்து கொண்டிருந்தன.

நல்லநாயகத்தின் நெஞ்சு குறுகுறுத்தது. அவர் ஆபீசையும் பக்டரியையும் சுற்றிப்பார்க்க அன்று வந்தபோதும் தம் குற்ற நெஞ்சை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. நடந்தே வந்திருந்தார். காரில் சிறிய பழுது என்று கண்டக்டரிடம் சாட்டுச் சொன்னார்,

கண்டக்டர் தெய்வ பக்தி மிக்கவர். தம்மிடம் அவர்கள் வந்திருப்பின் ஏதாவது ஏற்பாடு செய்திருக்க முடியும் என்று வருந்தினார். தொழிலாளர்களிடை நிலவிய உணர்ச்சிகளை

அவர் துரையிடம் தெரிவித்தார். அவர் அதை தமது கடமை யாகவும் எண்ணுபவர்.

"காளியம்மா செத்ததிற்கு நீங்கள்தான் காரணம் என்று எல்லோரும் ஆத்திரமாகப் பேசித் திரியிருங்கள்"

"சாகிறவர்கள் சாகத்தான் செய்வார்கள். அவளைக் காப் பாற்ற நான் என்ன தெய்வமா?"

நல்லநாயகம் தத்துவம் பேசினுர்கள்.

"அப்படித்தான் நானும் வேலப்பனிடம் சொன்னேன். ராத் திரி நீங்கள் கொஞ்ச மனுஷத்துவம் காட்டியிருந்தால் தெய்வ மாகியிருக்கலாம் என்று அவன் சொன்ஞன்"

கண்டக்டர் தமது கருத்தையும் சேர்த்து வேலப்பன் பேரால் போட்டுவிட்டார்.

கொஞ்ச நாளைக்குத் தோட்டப் பக்கம் தனியச் சுற்றிப் பார்க்கப் புறப்படவேண்டாம் என்ற எச்சரிக்கையையும் கண்டக் டர் தெரிவித்திருந்தார். சில நாளையில் ஆத்திரம் யாவும் அடங்கிவிடும் என்பது அவரது கருத்து.

நல்லநாயகம் கண்டக்டர் பேச்சை அதிகமாகத் தட்டமாட் டார். பள்ளத்தாக்கு வழியே இறங்காது நேரடியாக பக்டரிக்கு போய்விடலாம் என்று மனம் ஒரு கணம் நிழலாடியது. மீண் டும் சிரிப்பொலி கேட்கவே அவரின் அதிகாரமான உணர்ச்சி கள் விழித்துக் கொண்டன. பள்ளத்தாக்கு வழியே தேயிலைச் செடிகளின் இடையே வளைந்து ஓடிக்கொண்டிருந்த ஒற்றை யடிப் பாதை வழியே இறங்கி நடந்தார். இடுப்பிலே இருந்த வெள்ளி முலாம் போட்ட கைத்தடியை கையிலே பிடித்துக் கொண்டார். உடலிலே சூடேறியது.

சிந்தனையில் ஆத்திரம் ஏற கீழே பார்த்தபடியே இறங்கிக் கொண்டிருந்தார். எட்டுப் பெண்களால் என்னதான் செய்து விட முடியும்!

பதுளையிலுள்ள தோட்ட மொன்றில் கொழுந்துக் கூடை யால் ஒருத்தி துரைக்கு அடித்த ஒரு செய்தி பற்றி எவரோ சொன்னதும் அவருக்கு நினைவு வந்தது. கைத்தடியை இறுகப் பிடித்துக் கொண்டார். வெருட்டுவதற்குக் கைத் துப்பாக்கி யையும் கொண்டுவந்திருக்கலாம். பேதலித்த மனம் குழம்பி யது.

சிரிப்பும் கலகலப்பும் சிறிது ஓய்ந்திருந்தது. குனிந்த தலைகளை நிமிர்த்தி துரையைப் பார்த்தனர். அவர்களின் கண்களிலே வஞ்சப் பார்வை இருந்ததை நல்லநாயகம் கவனிக்கவில்லை. அமைதியிடையே விரல்கள் சுறுசுறுப்பாக துளிர்களைக் கிள்ளிப் பின்புறக் கூடையுள் வீசிக்கொண்டிருந்தன.

அவர்களின் அமைதியும் சுறுசுறுப்பான வேலையையுமே அவரால் பொறுக்க முடியவில்லை. ஆத்திரத்தால் சிந்தனை குழம்பியவராக சத்தமிட்டார்.

"வேலை செய்யேக்கை என்னடி சிரிப்பும் கலகலப்பும். ஆரவன் கங்காணி! எங்கை போட்டான்"

"அவன்தான் பழனி. உங்கம்மா சொல்லியனுப்பி உங்க வீட்டுக்குத்தான் போறான்."

மாரியாயி வாய் திறந்தாள். எல்லோருமாகச் சிரித்தார்கள்.

'என்னடி சிரிப்பு."

"என்னடி அங்கம்மா, மாப்பிள்ளை அதட்டுகிறார்."

தெய்வானை சொன்னாள்

"வீட்டிலை அம்மா சரியாய் குடுத்திருக்கிறா. அங்கை வாய் காட்டத் தெம்பில்லை. அதுதான் இஞ்சை வந்து பாயிறார்."

மீனாட்சி பதில் சொன்னாள்.

"பொத்தடி வாயை"

நல்லநாயகம் கத்தினார்.

"போய் உம்மடை பெண்டாட்டியின்ரை சொல்லுக் கேட்டுத்தான் அண்டைக்கு காளியம்மாவுக்குக் காரில்லை எண்டீராம்"

மருதாயி நிமிர்ந்து எரித்து விடுபவள்போல் பார்த்தாள்.

நல்லநாயகம் எதுவும் பேசமுடியாது அசந்து போய் சிறிது நேரம் நின்றார். அவர் முகத்தில் ஆத்திரம் பொங்கிக்கொண்டிருந்தது. முகத்தில் வியர்வைத் துளிகளும் அரும்பின.

சுற்றிவரப் பார்த்தார். எவருமே தென்படவில்லை. வந்த வழியே திரும்பலாமோ என்று பார்த்தார். அதற்கிடையில் பெண்கள் யாவரும் அவரைச் சுற்றி பரந்து நின்று கொழுந்து பறித்துக் கொண்டு நின்றனர். நல்லநாயகம் வந்த ஒரடிப் பாதையை இடை மறித்து நின்றபடியே மாரியாயும் அங்கம்மாவும் கொழுந்தைப் பிடுங்கிக்கொண்டு நின்றனர்.

"என்னடி மாப்பிள்ளை பேசாமல் நிற்கிறார்."

வேலாயி கேட்டாள்.

"அவர் உன்னைத்தான் பாத்துக்கொண்டு நிக்கிறார். அவருக்கு நாக்கூறுவதைப் பாக்கேல்லையாடி"

காமாட்சி சொன்னாள்.

"சீ இவன் அம்மணமாய் நிண்டாலும் எனக்கு ஆசை வராதடி"

வேலாயி அருவருப்போடு கூறினாள். எல்லோரும் சிரித்தனர்.

"ஏண்டி அங்கம்மா பேசாமல் வழியை மறித்துக்கொண்டு நிக்கிறாய்? இந்தத்துரை மாப்பிள்ளை வேணுமெண்டால் நீ கட்டிப்பிடித்துக்கொள். நாங்க கண்ணை மூடிக் கொள்ளிறம்."

"சீ இந்த நாயைக் கட்டிப் பிடிக்கிற நேரத்திலை ஒரு கருங் கல்லைக் கட்டிப் பிடிக்கலாம்."

சொல்லியபடியே வாயில் அதக்கி வைத்திருந்த வெற்றிலைச் சக்கையை நல்லநாயகத்தின்மேல் துப்பிவிட்டாள், அங்கம்மா.

முகத்தில் வியர்வை வழிய, மானம் இழந்த நிலையில் நின்ற நல்லநாயகம் அவமதிப்புத் தாங்க முடியாது கைத்தடியை அங்கம்மா மேல் ஓங்கினார்.

"என்னை ஆரெண்டு நினைச்சாய்" நல்லநாயகம் கத்தினார்.

"காளியம்மாவைக் கொன்ற பேயெண்டு. முடிஞ்சால் அடியும் பாப்பம். பெண்டாட்டிக்கு அடிச்ச பழக்கமோ"

அங்கம்மா அவருடன் உரஞ்சிக்கொண்டே நெருங்கிச் சென்றாள். அவரது வெள்ளைச் சட்டை அழுக்கானது. அவர் ஓங்கிய கைத்தடியைப் பிடித்தபடியே பாதை வழியே நடந்தார். அங்கே வெள்ளச்சி வழியை மறித்தபடி கொழுந்து கிள்ளிக் கொண்டு நின்றாள்.

"என்னடி வெள்ளச்சி மாப்பிள்ளை உன்னிலை உ ர ா ஞ் ச வாறார்"

"அவற்றை அம்மாவுக்கு சீக்குப் பிடிச்சிட்டுது. அது தான் இப்ப தேயிலைத் தோட்டத்துக்கை இளங்குட்டி தேடி வாறார்."

"எப்பிடியெடி கண்டு பிடிச்சாய் ?"

மீனுட்சி கேட்டாள்.

"கண்ணைப் பாத்தா தெரியேல்லே."

"துரையின்ரை கார் பவனியை கொஞ்ச நாளாய் காணேல்லே?"

மருதாயி கேட்டாள்.

"அதுதான் காளியம்மா பேயாய் காரைச் சுத்திக்கொண்டிருக்கிருள். ஒரு நாளைக்கு மலேச்சரிவிலே பிள்ளைகுட்டியளோடை காரைப் பிரட்டிவிடப் போகிருள் எண்ட பயத்திலே தான்."

காமாட்சி பதில் சொன்னுள்.

"அப்பிடிப் பிரண்டு சாகட்டும் சீ உந்த நாய் போக வழி விடுங்கடி"

வேலாயி சொன்னுள். காறித்துப்பினுள். எல்லோரும் காறித் துப்பினர்.

மாரியாய்யும் அங்கம்மாவும் ஒற்றையடிப்பாதையை விட்டு செடிகளிடையே நுழைந்தனர். விரல்கள் சுறுசுறுப்பாக வேலே செய்து கொண்டிருந்தன.

நல்லநாயகம் ஆண்மையிழந்து மானம், அதிகாரம், உடுக்கையாவும் இழந்தவர் போல நெற்றி வியர்வையையும் வெற்றிலேத் துப்பலேயும் துடைத்தபடியே வந்த வழியே வீடு நோக்கித் திரும்பினுர்.

பெண்களின் வஞ்சம் நிறைந்த கலகலப்பும் சிரிப்பொலி மீண்டும் கேட்டன. அவ்வொலி மலேயெல்லாம் எதிரொலித்து அவரை அங்கிருந்து விரட்டிக் கொண்டிருந்தது. O

## அறியாமை

எமது நாட்டு ஏழை மக்களுக்கு உலகத்தின் மற்ற நாடுகள் பற்றி ஒன்றும் தெரியாது. ஆகையால் அவர்கள் தங்களுக்குள்ளேயே தங்கள் ஏழ்மைத் தனத்தை நினைத்து விதி என்று சகித்துக் கொள்கிருர்கள்.

—ராகுல்ஜி

# ஒண்ணுமில்லை

மனைவி: காலை யெழுந்ததும் வேலையெண் டோடுறீர்
காசுகீஸ் ஒண்ணையும் காண யில்லை
நாலுநாள் ஆச்சுது நல்ல கறிதிண்டு
நல்லாய் இருக்குதும் நாடகந்தான்.

தேங்காய் புளிவாங்க யாரிடம் போவது.
தேய்ஞ்சு போய்ச் செங்கட வாழ்க்கை யெல்லாம்
தூங்கிக் கிடந்தாநம் நாளை நடப்பதென்ன?
துன்பம் தொடர்தல் தெரிய லையோ?

கணவன்: பொழுது விடிஞ்சுபோய் மாலை வந்தாலிங்கு;
"புறுபுறு" சத்தம் குறைச்ச வில்லை.
அழுது கதறினும் அங்கு முதலாளி;
அஞ்சு சதம்கூட்டித் தாருனில்லை.

வெய்யிலில் நொந்துநான் வீடுவந் தாலெந்தன்;
வேதனை இங்கு புரிவ தில்லை;
பைய நடந்திந்த வாசலைத் தாண்டினுல்
பாவி இவள்தொல்லை கொஞ்ச மில்லை.

மனைவி: என்னநான் சொன்னதில் என்ன குறையிங்கு;
என்ன கிடக்குது காச்சுதற்கு;
முன்னம் நீர்தந்த பணத்தில தானவன்;
மூத்தவன் காச்சட்டை தைப்பிச்ச ஞன்.

நேத்து நீர்தந்த இரண்டு ரூபாயது
நேத்தே முடிஞ்சுது இண்டைக் கில்லை;
பாத்துக் கொண்டேயிரும் பாவம் சிறசுகள்;
பஞ்சத்தாற் செத்து மடியட் டுமே!

கணவன்: ஒண்ணு மில்லையென்ற ஒப்பாரி இங்கேதான்.
ஓயாமற் கேட்டுக் கொண்டே இருக்கு;
பண்ணுதற் கென்ன கிடக்குதடி இன்னும்
பார்ப்பம் ஒருவழி வந்தி டாதோ!

— செ. மகேந்திரன்

சிறுகதை

# சதி

இ. சிவானந்தன்

தாழ்வாரத்திலே ஒரு பட்ட மாமரம் — காய்த்துக் குலுங்கும் செழிப்பானது அல்ல, குருவிச்சையின் கோரப் பிடிக்கு ஈடுகொடுக்க முடியாது தனக்குள்ளேயே செத்துக் கொண்டிருக்கும் குட்டை மாமரம். ஏற்றத்தாழ்வின் எல்லைக்கு அப்பாலிருந்து பூரண சந்திரன் தண்ணொளி பொழிகிறான். கெட்டுவிட்டுப் படர்ந்த கிளைகள் மின்னி வெளித்தன. விளக்கே ஏற்றாத குடிசையில் சந்திரவொளி சுயராச்சியம் செய்வதை யார் தான் தடுக்க முடியும்? அவ்விருள் சூழ்ந்த வீட்டிலே விளக்கேற்றவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டே வருடங்கள் எட்டுப் பறந்தோடிவிட்டன. கட கடவென உருண்டோடும் காலத்திலேகூட ஒரு வேகம்.

அந்தக் குடிசையில் நடமாடும் சீவனுக்குப் பெயர் கந்தையா. தானுண்டு தன் பசுமாடு உண்டு. ஏகாந்த நிலையில் சீவியம் போய்க்கொண்டிருந்தது. கந்தையா என்ற பெயருக்கேற்ப அரையிலிருப்பதும் கந்தைதான். பிள்ளையார் கோயில் கொடியேற்றத் திருவிழா பத்து நாட்கள் மட்டும், ஆனால் கந்தையாவுக்கு நாளாந்தம் மூன்று மணிக்குத் திருவுலா. தொக்கடி, உளவாரை சமேதராக, மூன்று முழச் செட்டைக் குறித்துண்டை உதறித் தோளிற் போட்டுக்கொண்டு கிளம்பி விடுவார்.

வயல் வரம்பு ஒரு பொல்லாத பொருள். எத்தனையோ அடிபிடி சண்டைகளின் ஆரம்பக் கரு. ஆனால் அதிலே வளரும் புல்லுக்குமா யோசிக்க வேண்டும். புல்லறுக்க என்று வரம்பில் குந்துபவரின் கை வயலுக்குள்ளும் செல்லாமலா விடும்? அடுத்தவனின் வயலிலே அநியாயமாகச் சாகிற புல்லை சாப்பாடின்றி வயிறொட்டும் கால்நடைகளுக்கு அறுத்துப் போட்டால் என்ன? அதேதோ அதைப்பற்றியெல்லாம் கந்தையா கதைக்கக்கூடா

தாம். வயற்காரனைப் பொறுத்த மட்டில் அதுவும் களவுதானாம். பாவம் கந்தையா; நேர்மையும் களவும் கலந்துறவாடத் தொக்கடி நிறையும் — இது அவரின் அன்றாட தொழில்.

அவரது சமையல் சுவையானது, அல்ல அல்ல அவரது சமையல் செய்யும் காட்சிதான் மிகவும் சுவையானது. ஒரு நாளைக்கு ஒரு சமையல் என்பது பொதுநியதி; ஆனால் அது இரண்டு மூன்று நாட்களாக நீளுவதும் உண்டு. உச்சியில் சூரியன் வர உலை ஏற்றுவார். காங்கேசன்துறையால் திரும்பிய யாழ்தேவி சாவகச்சேரிக்கு வரக் கஞ்சி வடியும். முட்டியைக் கழுவி அடுப்பிலேற்றுவார். அடுப்புள் நெருப்பு இருக்காது, பூனைதான் எழும்பி நின்று சாம்பலை உதறிச் சோம்பல் முறிக்கும். பக்கத்து வாரியார் வீட்டுக்குச் சென்று நெருப்பெடுத்து வருவதற்குள் பல விஷயங்கள் நடந்தேறிவிடும்.

அடுப்படி என்ற பெயரில் அமைந்த மட்டை வரிச்சலால் மறைக்கப்பட்ட அவ்வழுக்குக் குடிலிலே ஏக களேபரம். புகைத் தூசு மூடிய பனைமட்டை வரிச்சலினூடாக நன்றாகத் தெரிவதென்ன? அணிற்பிள்ளைகளும் புலுணிகளும் கூட்டாட்சி தொடங்கியிருக்கும். கூடையிலிருந்த கொஞ்சநஞ்ச நெல்லும் சிதறிச் சிந்த, தூசி படிந்த நிலத்திலே எறும்பு தின்ற குறைத் தேங்காய்ப் பாதி உருளும். அள்ளிவந்து வைத்த மூன்றுகால் வெண்கலச் செம்பின் வெடிப்பிலிருந்து பொசிந்து பெருகிப் பாய்ந்து பரந்து ஒட்டறையை மிதக்கவிட்டு வாசற்படியில் வட்டமிடும். இவையெல்லாம் கந்தையாவுக்குப் பார்த்துப் பார்த்துப் புளித்துப்போன பழைய காட்சிகள் — சர்வசாதாரண காட்சிகள்தான்.

சிவப்புருண்டை.

ஆம்; அந்தப் பூவரசம் பழுத்தலிலையில் கிடந்து மூசிப்பது, ஐந்து செத்தல் மிளகாய், இரண்டு தேங்காய்ச் சொட்டு உப்புக்கட்டிகள் மட்டுமே சேர்ந்து செய்துகொண்ட ஒரு கூட்டு ஒப்பந்தம். அதன் பயனாக உருவாகிய அக்கொட்டைப்பாக்களவு சிவப்புருண்டைக்குத்தான் பெயர் பச்சடி. மனைவியின் அறுசுவை உண்டியையும் ருசி பார்த்தவர்தான் கந்தையா.

ஆனால் மனைவியை இழந்த பின் இருபது வருடங்களாக அவரைத் திருப்திப்படுத்துவது இந்த அம்மிக் கறிதான்.

விளம்பர யுகத்தில் அன்பளிப்புக்குமா பஞ்சம்? இருந்திட்டு யாராவது வெண்டிக்காயோ கீரையோ கொண்டுவந்து கொடுப்பார்கள். அப்படி யாராவது கொடுக்கிறார்கள் என்றால் ஒன்றில் வெண்டிக்காய் முத்தலாகவோ, சூத்தையாகவோ இருக்கும். கீரை மாட்டுக்கு மட்டும் பயன்படக்கூடியதாயிருக்கும் என்பது மட்டும் உண்மை.

“இதென்னத்துக்கு எனக்கு ?”

வாய்தான் இப்படிச் சொல்லுமே தவிர, கை தன் வேலையைப் பார்த்துவிடும். கொடுத்தவரிடம் சொல்லொணுக் குறையுடன் கறியாக்குவார். கறியானல் மட்டும் அது குறைந்தது இரண்டு நாட்களையாவது கொண்டிழுக்கும் என்பது ஊரறிந்த இரகசியம்.

‘ஆண்டி குண்டியைத் தட்டுவது; பறப்பது சாம்பல்’ என்ற பக்குவத்தில் பொழுதுபட்டால் நித்திராதேவியை அரவணைத்து இருளுடன் ஒன்றிவிடுபவர் கந்தையா. அதனால் விளக்கேற்றவேண்டிய நிர்ப்பந்தமில்லாதிருந்த அவருக்கு இன்று ஒரு சுமை.

நேற்றுவரை இல்லாத சுமை இன்று அவரை அழுத்தியது. அது பாவச் சுமையா? அல்லது பாக்கியச் சுமையா? தலைமாட்டில் பாய்த்தடுக்கிலே நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்து கிடந்த பிஞ்சு முகத்தில் நிலவு படர்கிறது. நிர்மலமான ஒளி பரவுகிறது.

கோவணத்துடன் படுத்திருந்த கந்தையா, நாலுமுழச் சீலையால் வருகி வருகித் தன்னை மூடுகிறார். பாவம் மழைக் குளிர். பூரண நிலவு எறித்தது. முற்றத்து மண், மழை நீரோடு கலந்து சேறும் சகதியுமாய் மணம் வீசியது. கந்தையா மூக்கைச் சுழிக்கிறார். அவரருகில் புகைமண்டிய அரிக்கன் லாம்பு ஒன்று, ‘பொக் பொக்’கென மங்கி வெளித்தவாறு கண்ஜாடை காட்டுகிறது. வரட்டு இருமல் தொண்டையைவிட்டு வெளியேறும்போது ஒரு சாண் முன்சென்று பின்னேகும் பொக்கைவாய் அதற்குத் தாளம் போடுகிறது. தலைமாட்டில்

திரிகைக் கல்லுக்குமேல் பிய்ந்துபோய் மட்டை முறிந்த ஒரு கட்டைவேலி நார்க்கடகம் — அவரது கால நெகிழ்ச்சியுடன் இரண்டறக் கலந்த குடைத்தடி ஒன்று — அதுகும் வாய் அகன்று கம்பி முறிந்து தூங்கும் பித்தல் குடை. இவைதான் அவரது உடமை, சொத்து சாம்பத்தியம் எல்லாம்.

'காடு வா, வா எண்ணுகுது வீடு போ, போ எண்ணுகுது, என்ற பதத்தில் காலத்தைக் கடத்திக்கொண்டிருந்த கந்தை யாவைத், தொடர்ந்தும் வாழ்ந்துதான் தீரவேண்டுமென மாற்றி விட்ட அந்த நிகழ்ச்சி — நடந்து இன்று எட்டாண்டுகள் ஆகி விட்டன. இன்றைக்குப் பள்ளி செல்லும் பச்சிளங் குழந்தை யாகக் காட்சியளிக்கும் தங்கமுத்துவின் வருகை எப்படி என்று அறிவது பல கசப்பான உண்மைகளை வெளிப்படுத்தவல்லது.

* * *

அதோ, அங்கே வந்துகொண்டிருப்பது யார்? ஓ, அது வல்லிதான். வல்லி பேசுகிறான்,

"நயினார் நாம் காலமை. விடிய வெள்ளெனச் செல் லப்பா கமக்காறனுக்கு வீடு மேயப் போகுதெல்லே. இந்தப் போத்திலேயும ஒருக்கால் அதிலே குடுத்துவிட. இஞ்சை எனக்கிண்டைக்கு வேலைபள் வலு கடுவல் எங் குது. அதெங்கை மழையும் தன்ராவாரம் இருந்தாப் போலை வந்து குழப்புகுது. நான் இன்னும் பன்ரண்டு மரம் சீவவேணும். அப்ப பாக்கவன்......"

செல்லப்பா கமக்காரனும் தன்னிலும் பார்க்க உயர்ந்த சாதி. அதற்காக முட்டியில் கள்ளைக் கொழும்புச் சோடாப் போத்தலுக்குள் ஊற்றி மாட்டுத்தாள் கடுதாசியாலை பக்குவ மாய்ச் சுற்றிப் பய பக்தியோடு நீட்டுகிறான். கையிலே முட்டி கள் இன்னும் இரண்டு தூங்கின. வல்லி கச்சையாக உருட்டித் திரட்டிக் கட்டியிருந்த ஊத்தை வேட்டியை தேங்காய்க் கபர் முற்றாக ஆட்கொண்டிருந்தது. வேர்வையில் ஊறிப் புளித் திருந்த வேட்டியின் மடிப்புகளை ஊடுருவிச் சிறு சிறு வண் டினங்கள் ரீங்காரமிடுகின்றன. மன்னன், மக்களுக்கு அல்ல, வல்லி மரங்களுக்கு மன்னன் — ஏன் ஒரு வகையில் பார்த்தால்

மக்களுக்கு மக்களுக்கும்தான். மக்களை ஆண்ட மன்னருக்குத் தலையிலே கிரீடம், வல்லிக்குத் தலையிலே தளநார். மன்னனின் கையிலே செங்கோல், வல்லியின் கையிலே தட்டுக்கொட்டன், முட்டியிருந்த கள்ளு நுரைத்துப் பொங்கிக் குமுறிக்கொண்டிருந்தது. அதிலிருந்து எகிறியெழுந்த நெடி நேராகக் கந்தையாவின் மூக்கைத் துளைத்தது.

கள்ளு! கள்ளு!! கள்ளு!!!

கள் என்றால் என்ன? அதுவும் உலகத்திலுள்ள மற்றும் ஏனைய வஸ்துகளைப் போன்றதொன்றுதானா? அதேதோ கந்தையாவைப் பொறுத்தமட்டில் அவரையே, அவருடைய ஒரே மகளையே ஆட்டிப் படைத்த அரக்கன். கள்ளுப் போத்தலைப் பின்னணியாகக் கொண்டு தனதருமை மகள் தங்கம்மாவின் சோக சரித்திரமே முகிழ்த்தெழுந்தது.

* * *

“எடி மோனை பிள்ளை....ம்....ம் உன்னை அநியாயமாய் ஒரு குடிகாறனுக்குக் கட்டிக் குடுத்திட்டன். அதுக்குத்தான் கடவுள் என்னை இன்னும் உயிரோடை வைச்சு வதைக்கிறாரோ என்னவோ. சிச்சீ நான் ஒரு மடையன். நீ, இப்ப இருந்தால்....”

ஒரு பெருமூச்சுடன் நெற்றிப் பொட்டில் அடிக்கிறார்.

“நான் என்ன செய்ய? என்னிலை என்ன பிழை? எனக்குத் தெரியுமே இந்தறுவான் இப்பிடிக் கவிழுவானெண்டு. சுப்புறு மணியம் - விளாத்திவளவு, அறுகுவெளி வயல் ஐம்பது பரப்பு.. அந்நேரம் அவனுக்கென்ன? ஒரு அல்லல் அளப்பில்லை. அருமையான பொடியனெல்லே நான் உன்னை அவனுக்குத்தானை கட்டிக் குடுத்தன். மூண்டு வரியத்துக்கை அப்பிடி மாறுவானெண்டு எனக்கெப்பிடித் தெரியும்?” அவரது உள்ளம் கொந்தளிக்கிறது. அதன் பிரதிபலிப்பு, படபடவெனக் கேள்விச்சுரம் மனத்திரையைக் கிழிக்கிறது.

* * *

சுப்பிரமணியம் — தங்கம்மா பொருத்தமான சோடி. ஊராரின் கழுகுக் கண்களுள் சர்வமும் அகப்பட்ட தம்பதிகள்

தான். ஆனால், பார்வை இருக்கிறதே, அதிலேதான் எத்தனை வகை? ஆரம்பத்திலிருந்த பார்வை வேறு. அப்பழுக்கில்லாத குடும்ப வாழ்வுக்கோர் எடுத்துக்காட்டாகக் காட்சியளித்தனர். ஆனால் இப்போ? சுப்பிரமணியம் குடிகாரக் கடைப்புளியாம், கொலைகார வாழ்க்கையாம். ஊர் பேசிக்கொண்டது.

* * *

விடியப்புறம் கிழக்கு வெளிக்க முன்னமே முகம் கை, கால் கழுவிவிட்டு அடுப்படிக்குள் போய் விடுவான். தங்கம்மா, வீடு வாசல் கூட்டிப் பெருக்கிவிட்டுச் சட்டியில் பழஞ்சோறு குழைத்தபடி இருப்பாள்.

"ம், கெதியாய்... ஒரு தொகை வேலை கிடக்கு".

"ஆ, ஆ திருவலைப்புடியிலே இருக்கோ, இந்தாருங்கோ வன்.

பயற்றங்காய், மாங்காய்க் கொத்துப் பச்சடி, கீரைக்கறியோடு சேர்த்துக் குழைத்துத் திரட்டிய திரணைகளை அன்போடு ஊட்டுவாள்.

'ஆ, ஆஹா... ஸ். ச் ச்... ப் அ"

வாய் சப்புக் கொட்டுறதே. 'ஊ..ஊக்' என்ன பல்லை நாக்கு — இல்லை, நாக்கைப் பல்லுக் கடித்துவிட்டதோ? அத்தனை ருசி புறங்கை விரல்களால் வழியும் குழம்பை நக்குவான். அத்துடன் ஒடியற் புட்டும் சேர்ந்துவிட்டால் அப்புறம் அவனது நாக்குத்தான் எத்தனை சுறுசுறுப்பு? மளமளவென்று வாய் தொழிற்படும். கண்கள் தங்கம்மாவின் மதிமுக அழகை அணு அணுவாகப் பருகும். மற்றக்கை விரலிடுக்குள் அகப்பட்ட பொரித்த மோர் மிளகாய் அடிக்கொருதரம் பல்லின் கடிக்கு ஆளாகும். திருப்தியாக ஐந்து திரணைகளைச் சரிக்கட்டிவிட்டுத் தோட்டத்துக்குப் போனான் என்றால், அவன் இரண்டு ஆட்களின் வேலையை எதுவித சிரமுமின்றி ஒரே மூச்சில் செய்து முடித்து விடுவான்.

அத்தோட்ட வெளியில் போட்டி வைத்துத் தோட்டச் செய்கைக்குப் பரிசு கொடுப்பது வழக்கம். அடுத்தடுத்து முதற் பரிசு சுப்பிரமணியத்துக்குத்தான். தன்னை மறந்த லயந்தனில் தோட்டத்திலே வேலையில் ஈடுபட்டிருப்பான். பக்கத்து வீட்

டுச் செல்லப்பருக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை. பொறாமை விசுவரூபம் எடுத்துப் பெரிதாக வளர்ந்து முற்றிவிட்டது. எப்பொழுதும் வெடிக்கலாம் செல்லப்பரின் சமதைக்கு வெகு தூரத்திலுள்ள ஒரு பரதேசிப் பயலுக்கா அடுத்தடுத்துத் திறம் தோட்டப் பரிசு?

"சீ, இவன் ஆர் கெடுகலும் பரிசு வாங்கிறதுக்கு? எங்கையோகிடந்த அலைளொருத்தி தாயைத்தின்னி தங்கம்மா எண்டவளோடை கூடி,... அவருக்குமொரு.... இது .."

செல்லப்பரின் உள்ளம் குமுறுகிறது, சந்தையிலோ என்றால் சுப்பிரமணியத்தின் வெண்டிக்காய்க் கடகம் தலையால் இறக்கு முன்பே விலை போய்விடும். அவ்வளவு மாற்று, அத்தனை குளிர்மை, கொழுப்பு. அவனுடைய 'ஊர் மரவள்ளிக் கிழங்கு' ஒன்று காணும் பத்துப் பேருள்ள வீட்டில் ஒரு நாட் சாப்பாட்டுக்கு, தங்கம்மாவும் கூடமாட ஒத்தாசையாய் தோட்டத்துக்குப் போய் வருவாள்.

"நேரம் செண்டு போச்சு இனி நீ போ, போய் வீட்டு அலுவல்களைப் பார்"

அன்புக் கட்டளை பிறக்கும். அவள் போய் விடுவாள்.

கொஞ்ச நேரம் கழித்து அவன் போவான். போகும் போது வழியிலே படலையைக் கை திறக்கும், வாய் தங்கம்மாவைக் கூப்பிடும்.

"தங்கம்! தங்கம்...!!"

பேச்சு மூச்சு இல்லாவிட்டால் வீட்டுத் தோட்டத்திற்கே தேடி போய்விடுவான் சுப்பிரமணியம். கையிலே அரிந்த வாழையிலையுடன் நகை உதிர்ப்பாள். வயலால் வந்த களைப்பு யாவையும் மறந்து தங்கம்மாவுடன் விளையாடவே தொடங்கிவிடுவான். என்ன அழகான வீட்டுத் தோட்டம்? பட்டணத்துப் பூங்காக்கள் பிச்சை வாங்க வேண்டும். மதத்து வளர்ந்து குலைதள்ளிய படி வாழைகள் ஆறோ ஏழோ நிற்கும். ஆங்காங்கே பூத்து வாசம் வீசும் மல்லிகை முல்லைப் பூச்செடிகள் பழுத்துப் பாரம் தாங்காது விழும் தறுவாயிலுள்ள தக்காளிச் செடிகளையெல்லாம் இஞ்ஞா அலம்பலால் தூக்கிப் பிடித்து உண்டு கொடுத்து விட்

டிருப்பாள். எங்கும் ஒரே நிறைவு. சுருங்கச் சொல்லுவதானால் பார்க்குமிடமெல்லாம் மனதைக் கொள்ளை கொள்ளும்.

இவ்வளவுக்கும் மத்தியில் மகளின் மகிழ்ச்சியான குடும்ப வாழ்வில் உள்ளம் பூரித்துப் போனவர் தான் கந்தையா. அப்படியிருந்த அவரின் மனம் தன் ஒரே மகளின் அகாலமரணத்தைக் கனவிலும் நினைக்கவில்லை. தங்கம்மாவின் தன்னிகரற்ற குடும்பவாழ்வைத் தரமட்டமாக்கிச் சிதறடிக்க வந்ததுதான் கள்ளு. அதற்குத் தோன்றாத் துணையாயிருந்து தூபமிட்டவரோ மகாப்பிரபு— ஊர்ப்பெரிய மனுஷன் செல்லப்பா.

சுப்பிரமணியத்திடம் சொந்தத்தில் தோட்டத்தறை கிடையாது. வாரத்துக்குத் தோட்டம் செய்துவந்தான். அத்தறையை அடுத்துச் செல்லப்பருக்கு ஒரு வளவு உண்டு. பெயரளவில் தான் அது வளவு, அங்கே அரசாட்சி நடத்துபவர்களோ அவரையே அறியாத அநாமதேயப் பேர்வழிகள். தென்னை மரங்களும் மாமரங்களுமாகச் சேர்ந்து வளவைச் சோலையாக்க முற்பட்டாலும் அவற்றிற்குப் பல விரோத சக்திகள் வெளிக்கிளம்பின. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த முட்பற்றை கிஞ்ஞாக்காடு ஸ்ரீராமபக்த ஹனுமான் சந்ததியினரின் வாசஸ்தலம். பட்டின சங்கத்து மலசல கூடங்களுக்கில்லாத மவுசு அவ்வளவுக்குண்டு. இப்படியான ஒரு வளவைத் திருத்தி எடுப்பதென்றால் ...... அதுகும் வேலைக்காரர்கள் குதிரைக் கொம்பாகக் கிடைக்கும் இந்நாட்களில்—காசு செலவளித்துத் திருத்துவது என்றால் அது லேசான காரியமா? படீரென உதித்தது ஒரு யுக்தி செல்லப்பருக்கு ஒரே புளுகம்.

“டே வல்லி! நீ உங்கினை பெரிய அம்பாயப்பட்டுக் கொண்டு திரியுறாய். அங்கை வீட்டிலையும் பெரிய இடஞ்சலுகளெண்டு இப்பத்தான் ஊனை வள்ளி வந்திருந்து ஒப்பாரி வைச்சிட்டுப் போறாள். என்ன செய்யிறது பின்னை; போனால் போகுது நீ மதகடி வெள்ளையன் வளவுக்கை ஒரு கொட்டிலைப் பின்னைப் போடன். நான் இடம் தாறன். ஆனால் ஒண்டு, வேலி எல்லாம் சிக்காராய் அடைக்கிறது உன்ரை பொறுப்பு”

“நாம் நல்லாயிருக்க வேணும். அதெல்லாம் நல்லவடிவாய் நான் அச்சறக்கைப் பண்ணித் தாறது. நான் நயினாரை விழுந்து

கும்பிர்றன். நமக்கு நான் மாதம் முப்பது உருவா தாறன்; சரியெண்டு சொல்ல."

"அட...டா....டாடா அதென்ன அதெல்லாம் அப்பிடி யொண்டும் வேண்டாம் இருபத்தைஞ்சு ரூபாத் தா, காணும். சரியோ?......"

தன்னிடம் அப்போதைக்கிருந்த பற்கள் அத்தனையையும் காட்டிக் கூனிக் குறுகிக் குழைந்து விழுந்து கும்பிட்டுவிட்டு இராஜநடை நடந்தான் வல்லி.

"இஞ்சார், இண்டைக்கு அடிச்ச யோகத்தைப் பாரேன்'

"என்ன அப்பிடி யோகம் அடிச்சுட்டு உங்களுக்கு?"

"இஞ்சே! இருந்து பார் இன்னுமொரு இரண்டு மாதத் திலே வெள்ளையன் வளவு, வளவாகுமோ இல்லையோ? எண்டு அந்த வளவு வரும்படி மட்டும் காணும் காளிமோயில் பூசைக்கு மாத்திரம். ஆனால் ஐபரைச் சும்மா புக்கைபோலை சரிக்கட் டும் காணும் எண்டிட்டுப் பார் விளையாட்டுக் காட்டிறன். சுப் பிரமணியன் இப்ப தோட்டம் செய்கிற வயலுக்கு என்ரை குஞ்சியப்புவர் வழியலே ஒரு தாயுறுதி கச்சேரியிலே ஆரை யேன் பிடிச்சால்... பழைய தோம்புகளுக்கை அதுகும் எங்கை எங்கையோ? ஆனால் ஒண்டு உவங்களைக் கோட்டுக்கிழுததுப் பிச்சுப் புடுங்கிப் போட்டு விட்டிடுறன். இனி என்ன? நீ இருந்துபார், உந்தச் சந்தையாலே போற வாற சனம் இரண்டு கிழமைக்கு உளக்கிவிட வளவு தன்பாட்டிலே வெட்டையாய்ப் போம். தவறணையைக் கிழமைக்குக் கிழமை இடம் மாத்தி விடச் சொல்ல வேணும் அவ்வளவுதான்.

மகிழ்ச்சிப் பெருக்கால் உளறிக் கொட்டியபடி, கட்டில் கிடந்த பால் செம்பைக் கையில் எடுத்தார். பெடலை மிதித் தார். சைக்கிள் மெல்லக் கோயிலை நோக்கி நகர்ந்தது.

*　　　*　　　*

விடிய விடியக் கோயிலடியில் திருவிழாப் பார்த்த களைப்போ என்னவோ செல்லம் அசதியாய் ஈசிச் செயரில் சாய்ந்தார். வெள்ளையன் வளவில் தவறணை போட்டும் மாதம் இரண்டாகி விட்டது. காளித்தாயே காட்சியளித்தாற்போல் வந்த மனைவி

யைக் காணதபடிக்குக் கண்ணிமைகள் லேசாகக் குவிந்தன. ஒலியலைகள் காதுச் சவ்வைத் தகர்த்தன.

"மெய்யே, இஞ்சாருங்கோ, உங்களைத்தான்-இவன் சுப்புர மணியன் பக்கத்து வளவிலை தண்ணிப்பாட்டி நடக்குதெண்டும், அதாலை தனக்குப் பயிரழிவு எண்டும் விதானைக்குப் பெட்டீசம் எழுதிப் போட்டிருக்கிறானும். ஊரிலை உள்ளவளவை என்னைப் பிடிச்சு இழுத்து வைச்சுக் கேட்கிறாளவை. மானமெங்கை? மரியாதை எங்கை? நீங்கள் கால் நீட்டி ஆசறிதியாய்ப் படுத் திருக்கிறியள் என்ன?

"எடி! மானமும் மரியாதையும் இப்பென்ன கொடிகட்டிப் பறக்குதே? என்ரை கையையும் மிஞ்சி இஞ்சையொ விதானை யும் மணியகாறனுமே? உந்தப் பருப்பு மட்டும் என்னிலை அவியாது ஓ! எட, அவர் பக்கத்துக் காணிச் சொந்தக்காறன் நான் எண்டதுகூடி யோசியாமல் பெட்டீசம் எழுதிப் போட் டிட்டார், பெட்டீசம் என்ன? அதை இப்பேன்? கொஞ்சம் பொறு, கொஞ்சம் பொறு; நான் விதானை பொன்னம்பலத்தை ஒருதரம் கண்டு விசாரிச்சுப் போட்டுச் செய்யிறன் வேலை, ஓ!

பொருங்கோ அப்பா, இப்பென்னத்தைப் புடுங்கி அடுக்கப் போறீர்?

"எட, என்ன துணிவு அவருக்கு?...ம்...இப்ப என்ன செய்கிறது... ஓ, அதுதான் சரி, இஞ்சாரும் நீர் ஓடிப்போய் நான் சொன்னதெண்டு இவன் நாவலடியில் தவிட்டு மீனாட்சி யிட்டை ஐஞ்சு கொத்துச் சணல் கொட்டை வாங்கியாரும். வல்லி யிட்டை நான் இப்பபோய் இந்தமாதக் காசு வேண்டாமடா எண்டு சொல்லி இரவைக்கு விதைப்பிச்சுப் போடுறனே. முந்த நாள்தான் அங்கினை உழுதுபோட்டுப் போனது போலை கிடந் திது, அது நான் இரவைக்கு மறுப்பிச்சு விடுறனே. எட! சுப்புறு மணியம்....ம்"

சுப்பிரமணியம் இரண்டு நடை எரு ஏற்றிக் கொண்டு போய்த் தறை சிராக்கும் போதும் தங்கம்மா துணைக்குப் போனாள். வேலை சரியான கடுவல். நெற்றியிலை ஊற்றெடுத்த வியர்வை நீர் மூக்கால் வடிந்து நாக்கில் படிந்து சுவறி உப்புக் கரித்தது. நாக்கால் மேற்சொண்டை நக்கித் துடைக்கும்

போது அவன் சிந்தனை எங்கெங்கோ எல்லாம் சென்று மீண்டது. இன்னும் இரண்டே இரண்டு மாதத்தில் டயாரோ வந்து பாப் பார். கவுண்மேந்துப் பரிசு நிச்சயம் அவனுக்குத்தான். மனைவி யைப் பற்றிய நினைவிலோ எல்லைகடந்த மகிழ்ச்சிப் பிரவாகம். ஒரு மாதத்துக்குள் கொஞ்சிமகிழ ஒரு பிஞ்சுக் குழந்தை. அப்பா; என்று தன் தளிர்க்கரங்களை அசைந்து வரவேற்க ஒரு குழந்தை. மகிழ்ச்சி ஊற்றில் முக்குளித்தான்.

* * *

தலையிலோ கடகம். அதற்குள் விதை வெங்காயம், வெண் டிக் கொட்டை இத்தியாதி விதைகள், பொட்டலம் பொட்டல மாகக் கிடந்தன. சுப்பிரமணியம் செங்காரி-மறையன் சோடி மாடுகளையும் அவிழ்த்துக் கொண்டு வெளிக்கிட்டான். கடகத் தைக் காளிகோயில் வாசலில் இறக்கி வைக்கப் போகையில், ஒரு கல்லு காலை இடறி விட்டது. பெருவிரல் கிழிந்து விட்டது. லோகமாதா காளித்தாயின் சந்நிதியில் பச்சை இரத்தம். விரலி லிருந்து செங்குருதி பெருகியது. உள்ளத்து உரம் தளதளத்து விட்டதோ என்னவோ மனப்பிராந்தி பற்றிக் கொண்டது. ஏதோ கைகூடமாட்டாத ஒன்றை முயற்சிக்கப் போகிறவன் போலிருந்தது. காளியைப் பிரார்த்தித்து விட்டு உடைந்த உள்ளத்தை ஒட்டுப் போட்டபடி வயலுக்குள் காலடி எடுத்து வைத்தான்.

காளித்தாயின் மனம்குளிர இளநீர் ஒன்றை ஓங்கி உடைத்து விட்டுக் கர்ப்பூரம் கொளுத்தினான். கண்களை மூடிக் கோயிலை நோக்கி வேண்டுதல் செய்தான். வருடாவருடம் வாழவைத்த மண்ணை அணுகினான். விதையை ஊன்றினான். கையை உறுத்தியது ஒரு மொக்குத்தடி. கண்ணின் பார்வை யைப் பாத்தியுள் பதித்தான். தலையைச் சுற்றிலும் ஆயிரம் சம்மட்டி அடி ஏக காலத்தில் விழுந்தது போலிருந்தது. சுற் றிச் சுற்றிச் சித்தப்பிரமை பிடித்தவன் போல வெறிப் பார்வை பார்த்தான். ஒரே சூனியம். தொண்டையில் நீர் வற்றிக் காய்ந்தது. எங்கும் சணல் முளைகள் தலையெடுத்துத் தூக்கித் தமது வாழ்க்கைப் பயணத்தை ஆவலோடு எதிர்நோக் கின. அத்தனை சணல் முளைகளும் அவனுக்குச் சவால் விட்டு

மார்தட்டின. இம்முறைத் தோட்டப்பரிசு உனக்கில்லை என்று அவனைப்பார்த்துப் பரிகாசம் செய்தன.

விரக்தியடைந்த சுப்பிரமணியத்தின் விரக்தி மனப்பான்மையை மென்மேலும் பெருக்குமாப் போல், செல்லப்பரின் வெள்ளையன் வளவில் ஒரே கும்மாளம். கவிதைகள், காவியங்கள், கதாப் பிரசங்கள், பாட்டுக் கச்சேரிகள் அப்பப்பா! மனமுடைந்து வீடு திரும்பினான், அங்கு "குவா குவா" என்ற அழுகைக் குரல் கீசிட்டது. அவனுடைய நிம்மதியான வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி. வீட்டு வாசலில் பெண்கள் கூட்டம். பெண் குழந்தை பிறந்திருந்தது. சுப்பிரமணியத்தின் வாய் புசத்தியது.

"நல்ல நேர காலத்திலான் பிறந்திருக்குது சனியன்!"

மனத்துக்குள்ளாகக் கறுவினானே தவிர வார்த்தைகள் வெளிவரவில்லை. செல்லப்பர் ஆறுதல் கூற வந்தார். பரிந்து பேசினார். முதுகைத் தடவி உற்சாகமூட்டினார்.

"தம்பி! சுப்பிரமணியம்! பொரிவார் ஆரோ வேணுமெண்டு விஷமத்துக்குச் செய்யுமாப்போலை செய்திருக்கிறாங்கள் ஆரேண்டு தெரியவில்லை. அதுதான் போனது போகட்டும்; நீ, என்ரை கரைத்தறையைப் புடிச்சு இம்முறைத் தோட்டத்தைச் செய்யன்..."

செல்லப்பரின் தறையில் அவ்வருடத் தோட்டச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இருந்துமென்ன? முன்பிருந்த தெம்பும் உற்சாகமும் கிடையவே கிடையாது. ஆசை மனைவி தங்கத்தின் மடியில் பிள்ளை அழுதபடி கிடக்கும் தோட்ட வரும்படி என்று சொல்லத்தக்க அளவிற்கு எதுமில்லை. காயாகும் அற்ப சொற்பமும் வீடு வந்து சேராது... அம்முறைக்கான பரிசோ அவனை விட்டுப் பறந்தோடி விட்டது. வீட்டிலோ ஒரு வேளைச் சோற்றுக்கே தாளம் போட வேண்டிய நிலை தொழிலில் சலிப்படைந்தவனுக்கு ஆறுதல் அளித்தது செல்லப்பரின் வெள்ளையன் வளவு. அமிர்த சஞ்சீவியை அறிந்து கொண்டான். தஞ்சம் புகுந்தான். நளவல்லி சேர்த்து வாக்கும் கள்ளு நாக்குக்கு இதமாயிருந்தது. நாளுக்கு நாள் அவனை வசப்படுத்தத்

தொடங்கியது. தோட்டம் வெய்யிலிலே காய்ந்து பொரிந்தது. வெண்டிக்காய்கள் முற்றி வெடித்தன. கிளிகள் மிளகாய்ப் பழத்தைக் கொத்திப் பறந்தன. வீட்டிலே தங்கம்மா பிள்ளையோடு கவலையாகவே காலம் கடத்தினாள்.

வீட்டிலெல்லாம் இப்போ முன்போல நடவாக சுப்பிரமணியத்தை சந்தேகப்படத் தொடங்கிவிட்டாள் தங்கம்மா. வயிறு பற்றி எரியும். குழந்தை திண்ணையில் கிடந்து அழுது தொலைக்கும். புருஷனுக்குச் சாப்பாடு பிடிக்காது சட்டிபானை உருளும். அகப்பைக் காம்பு ஆடும். தங்கம்மாவின் நெஞ்சிலே முள். ஒரே துக்க சாகரத்தில் அழுந்தினாள். புருஷன் இப்போது ஊரறிந்த குடிகாரனாகி விட்டான். இப்போதெல்லாம் இரவில் வீடு வரப் பன்னிரண்டு ஒரு மணியாகிவிடும்.

கள்ளிலே புளித்த வாய்க்கு மனைவியின் பக்குவமான சமையலைச் சுவைபார்க்க முடிவதில்லை. அடிதடி கூட நடக்கும். நாட்செல்லச் செல்ல அவனுடைய நிலையும் மோசமாகிக் கொண்டே போனது ஒரே குடி, அன்றொரு நாள், றோட்டெல்லாம் விழுந்தடித்து மிகவும் கேவலமான நிலையில் வீட்டுக்கு வந்தான். அரையிலிருந்த வேட்டியைப் படலைத் தட்டியிலிருந்த கொய்யா அலம்பல் கொளுவி இழுத்துக் கொண்டது. அவனுக்கோ எதுவித உணர்ச்சியுமில்லை. சிரித்தபடியே தள்ளாடினான். தங்கம்மா பத்திரகாளியானாள். அழுதாள், ஆவேசத்தோடு அவனுக்குக் கிட்டப்போய் சேலையொன்றை அரையிற் கட்டினாள். கையிலே இருந்த கத்தியை நீட்டி உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினாள்.

"என்னாலை இப்பிடிக் காலம் தள்ள ஏலாது, இந்தா கத்தி என்னை வெட்டு. வெட்டிப் போட்டுப் போய்க் குடி. குடிச்சுப் போட்டுக் கூத்தாடு...ம் முதல் என்னைச் சரிக்கட்டு."

"ம்.... பின்னை என்ன விட்டிடுவனோ? கொண்டா கத்தியை. நீ ஆர் என்ரை நடவடிக்கை பேசுகிறது?..."

கையில் வாங்கிய கத்தியால் ஒரே ஓங்கு. ஓங்கிய கத்தி தலையை இரண்டாகப் பிளந்தது. துடித்துத் துவண்டு விழுந்து விட்டாள் தங்கம்மா. கத்தியால் வழிந்த இரத்தம் கையால்

ஒழுகியது. பேய் பிடித்தவனானான். அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான் ஒருவருமில்லை. சால்வைத் துண்டுக்குள் குழந்தையை எடுத்துக் கொண்டு ஒழுங்கையால் ஓடினான். குழந்தை குழறியது.

*　　　　*　　　　*

புற்பாய்க்குமேல் முதலில் ஒரு சாலுமுழம் விரித்து அதற்கு மேல் தலையணை என்ற பெயருடனான ஊத்தை உடையில் தலைவைத்துப் படுத்திருந்தார் கந்தையா. மழைக்குளிரில் நடுங்கிக் குறண்டினார்.

“இந்தா பிடி”

குரலைத் தொடர்ந்து ஒரு பச்சைக் குழந்தை மடியுள் விழுந்தது. குழந்தையெல்லாம் இரத்தம் பிரண்டிருந்தது. நிலவிலே தூக்கிப் பிடித்துப் பார்த்தார். சந்தேகமேயில்லை. அவருடைய தங்கம்மாவின் குழந்தையேதான். பேத்தி தங்கமுத்து தன் பால்மணம் மாறா வாயைத் திறந்து “கிர்...கிர்’ எனச் சிரிப்புக் காட்டியது. ஆனால் கிழவன் கந்தையா இனிமேல் தங்கம்மாவைக் காணமுடியுமா? கந்தையாவுக்கு ஒரு புதுச்சுமை. சுப்பிரமணியம் ஓடினான். எங்கே? ஓடியவன் வாழ்க்கையின் ஓரத்துக்கா ஓடினான்? அதுதானில்லை. நேரே வெள்ளையன் வளவுக் கள்ளுக் கொட்டிலுக்கு ஓடினான்.

*　　　　*　　　　*

‘ம்...ம்...டே! வல்லி’ நான் வீட்டு மேய்ச்சலுக்குப் போகயில்லை, நீ வேறை ஆரிட்டையேன் குடுத்தனுப்பு...”

ஒருமுழுப் பொய்யைத்தான் கூறினார். ஆனால் அது அவரைப் பொறுத்த மட்டில் பொய்யே அல்ல. அது தன தருமை மகள் தங்கம்மாவின் ஆவியை நிச்சயமாகத் திருத்திப் படுத்தும் என்றே நம்பினார். ★

---

### வழிகாட்டி

“காசிக்கு வழி தெற்கே காட்டுகிறவன் கைலாயத்துக்கு நேர் வழி காட்டுவானோ?”

—மகாகவி பாரதி

O சிங்கள நாட்டிய நாடகம்

# செம்மலர்கள்

மூலம்: பிரேமசிறீ
ஹேமதாஸா குழுவினர்

தமிழில்: செ. ஞானசேகரம்

பலமுறை மேடையேற்றப்பட்ட சிங்கள நாட்டிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு மூலத்திலிருந்து அப்படியே தரப்பட்டிருக்கிறது.

---

(நகருக்குள் தங்கள் சுலோகங்களைக் கோஷித்துக்கொண்டு தொழிலாளர்கள் தோன்றுகிறார்கள்)

முதலாவது தொழிலாளி

செங்கொடியின் நிழலில் அன்றி
செகத்திலெங்கும் உதிக்கவில்லை வெற்றியின் ரூபம்
எங்களின் போராட்டமும் இன்றையதினம்
எளிதில் எமக்கு வெற்றிதரும் திண்ணமாகவே.

இரண்டாவது தொழிலாளி

பூமியில் புதைக்கப்பட்ட
எலும்பெல்லாம் செந்நிறம்.. செந்நிறம் (எல்லோரும்
வாட்கள் மோதும் போர்க்களத்தில் பாடுதல்)
நீரெல்லாம் செந்நிறம்... செந்நிறம்... (எல்லோரும்)

மூன்றாவது தொழிலாளி

எங்கள் கண்ணீரும் கம்பளையும்
கலந்த குருதியும் செந்நிறம் .... செந்நிறம்.
(எல்லோருமாக)
எங்களுக்கு வெற்றிபெறத் துடிக்கும்
இக்கொடியும் செந்நிறம்... செந்நிறம்...

முதலாவது தொழிலாளி

தொழிலாளி என்பது உலகில் மாண்புமிக்க பெயரே.
சகல துக்கங்களினின்றும் உலகை மீட்டு

அவன் செவ்விரத்தத்தால் உயர்வையுண்டாக்கி
பாதுகாப்பதும் அவனேதான். அவன் வியர்வைதான்
பேசரிய ஒற்றுமையோடு
போவோம் இன்று வரிசையிலே
போரணி கொண்டே தொழிலாளர்.

இரண்டாவது தொழிலாளி

முதலாளி வேடர் அடக்குமுறை
வலைவிரித்து
தொழிலாளரை
அடக்கப் போகிறார்கள்!

மூன்றாவது தொழிலாளி

ஐக்கிய மேற்பட்ட போதில்
அவ்வலையை நாமறுத்து,
கட்டிய விலங்கொடித்து
கடிதில் பறந்து போவோம்!

முதலாவது தொழிலாளி

வீடுகளில் உள்ளனர் குழந்தைகள்
அவர்கள் உண்ண உணவில்லை!

இரண்டாவது தொழிலாளி

துக்கமேன்?
அவர்கள் தொழிலாளி மக்களே!

மூன்றாவது தொழிலாளி

கஷ்டத்தைத் தாங்கி
கடும் போராடி
வெற்றி காணுதற்கு
எமக்கும் பழக்கம்;
அவர்க்கும் பழக்கம்.

முதலாவது தொழிலாளி

தண்ணீர் ஒரு மிடறு இல்லாது போயினும்
நாங்கள் சரணடையோம்...
உண்டிக் குணவின்றிப் போயிடினும்
நாங்கள் சரணடையோம்.

இரண்டாவது தொழிலாளி

எங்கள் உரிமை வியர்வையின் உரிமை
எங்கள் சொந்தம் வியர்வையின் சொத்து,
உடம்பில் வியர்வை
கைகளில் தடித்த தோல்
முதுகினில் பாரம் சுமந்த வைரம்...

விவசாயிகள் வருகிறார்கள்

சேனை நிலமெல்லாம் செழிப்பாக்கி
ஊண் உடை கொடுத்து,
நாட்டைக் காப்போர் விவசாயிகள்.
நாட்டைக் காப்போர் விவசாயிகள்.
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி,
நாட்டைக் காப்போர் விவசாயிகள்,
நமது இரத்த மணங்கமழ
நிறைந்து பொலிந்து விளைந்த கதிர்கள்
மணம் கொடுக்கும் பால்மணம் கொடுக்கும்.

(விவசாயிகள் தூர இருந்து கேட்கும் ஓசையைக் கவனிக்கிறார்கள். விவசாயப் பெண்கள் அறுவடைப் பாட்டுப் பாடிக்கொண்டு வருகிறார்கள்)

மாலையுடன் மணிமுத்தணிந்து
காதலை வளர்க்கும் பெண்கள் கூடி
நாணத்தை மறந்து வயலினுள் இறங்கி
அறுவடைக்காக ஒன்று சேர்வாரே!
சேர்ந்த கதிர்களை பொலியடிக்குமிடத்தருகில்
தலைசிறுத்து அடிபெருக்க சூடுமடுக்கி வைத்து
ஒன்று சேர்வாரே பெண்கள் ஒன்று சேர்வாரே!
ஆண்கள் உழுது பண்படுத்தி
பதப்படுத்திக் கொடுக்க
பெண்கள் நாற்றிட
நாற்றிட்ட வயல்களில்
நெற்கதிர்கள் முற்றி — சிரம் தாழ்த்தினால்
எங்கள் குடிசைகள் நிறையும்.

விவசாயி ஒருவன் பாடுகிறான்:

குடிசை குடிசை இந்த குடிசைக்கவி பாடும் குடிசையில்
ஜோலி ஜோலி எங்கள் செங்கொடியே ஜோலி
அலை அலையாம் கண்ணீரும் கம்பலையும் அலை
பெருகப்பெருக விவசாயி தொழிலாளி ஒற்றுமை
பலமடைக!

இந்நேரம் முதலாளிகள் பயங்கர ஓசையுடன் மேடையில் ஏறுகின்றனர்.

விவசாயிகள் ஒதுங்கிக்கொண்டனர்.
சூறையாடுவோரின் பாடல்

கூட்டமாக

நாம் யானைகளின் மக்கள்
இலங்கை முழுதும் வெற்றி கண்ட
நாம் யானைகளின் மக்கள்
இலங்கை முழுதும் வெற்றி கண்ட....

தலைவர்

எங்களடிமைகள் நீங்களெல்லாம்
(கூட்டமாக) எங்களடிமைகள்
கௌரவியுங்கள் எங்களைக் கண்டதும்
(கூட்டமாக) வணங்குங்கள் எங்களை
நாம் யானைகளின் மக்கள்
இலங்கை முழுதும் வெற்றி கண்ட
பணபலம் எங்களிடம் உண்டே.
துள்ளினால் அமுககிடுவோம்
யானையின் துஷ்டத்தனம் எமக்குண்டு
சரணடை அல்லது அமுக்கிடுவோம்

பின்னணியில்

சரணடையாதே
போராடு.
மிருக பலத்தை எதிர்த்தெழுந்து
போராடு.
சரணடையாதே.

கயிறுழுவை:

விவசாயிகளும் முதலாளிகளும் கயிறு இழுவையில், யாருக்கு வெற்றி என்று கூற முடியாத நிலை. விவசாயத் தலைவன் விவசாயிகளுக்குத் தைரியமூட்டுகிறான்.

இழுங்கடா ஏலேயென்று
சரணடையாது ஏலேயென்று
முதலாளிகளை ஏலேயென்று
தொலைத்திடவே ஏலேயென்று
காட்டு யானையை ஏலேயென்று
காலையில் இட்டு ஏலேயென்று

இதற்கிடையில் தொழிலாளர் கூட்டம் வருகிறது.

தொழிலாளிகளை ஏலேயென்று
ஒன்றுசேர்த்து ஏலேயென்று
விவசாயிதொழிலாளி ஏலேயென்று
கூட்டுபலத்தை ஏலேயென்று.

கயிறிழுவையில் முதலாளிகள் தோல்வியடைந்து மேடையில் அங்குமிங்கும் புரள்கிறார்கள். அவர்களைச் சூழ்ந்துகொண்ட விவசாயி - தொழிலாளிகள் சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர்.

அவனுக்குப் பெயரிடு - இவனுக்குப் பெயரிடு
காட்டுயானை
இவனுக்குப் பெயர்
இவனுக்குப் பெயர் - இவனுக்குப் பெயர் வை
சோற்றுத் தட்டுவம்
இவனுக்குப் பெயர்
இவனுக்குப் பெயர் - இவனுக்குப் பெயர் வை
காட்டு வேடன்

ஒரு தொழிலாளி கவிபாடுவதற்காக மேடைக்கு வருகிறான்

முதலில் மேடைக்கு வரும்போதே
தோழர்களே! தோழர்களே! என்று கூறி சிரம் தாழ்த்தி கவியைப் பாடுகிறான்.

தோழர்களே! தோழர்களே!
இரத்தக் கண்ணீர் பெருமூச்சுடன் நெற்றி

வியர்வை நிலத்தில் சிந்த
தசை நிறைந்த கைகள் மரத்துப்போக வேலை செய்து
புது உலகை ஏற்படுத்த
போராட்டத்தில் வெற்றி கொண்டு அல்லாத
தோல்வியை ஏற்கமாட்டான்
அவனைத்தான் மாண்புமிக்க தொழிலாளி
என உலகம் நாமமிடுவது.

(பெண்கள் வருகிறார்கள் - அவர்கள் பெண் தொழிலாளர்கள்)

தோழர்களே! தோழர்களே!!
இரத்தக் கண்ணீரால் பிறந்த காட்டை
உரமிட்டு வளம்படுத்தி
சுமை தூக்கும் பாரத்துடன் நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்தி
தோளோடு தோள் தட்டி தோல்வி காணாது
வெற்றி கண்டு
அப்படிப் பெருமதியான பெண்ணுக்குத்தான்
பெண் தொழிலாளி என்பர்
சீமான்களின் சூறையாடலை ஒழிப்பதற்கு
குரல் எழுப்பி
குருதிபோன்ற தொழிலாளர் செங்கொடியுடனே
போராடி வெற்றி காண்போர்
அடிமைத் தளையை அறுத்தெறிந்து வெற்றி
முரசு கொட்டுவோர்
அந்த காரத்திலாழ்ந்த உலகிற்கு புத்தொளியை
உண்டு செய்வோர்

(இதன்பின் விவசாயி வருகிறான்)

மிருகபலத்தாலும் கெடுக்க முடியாத
சூரத்தனமாக வேலை செய்து
வளநிலத்தால் ஊண் உடை செய்து
ஜயபேரிகை கொட்டுவோர்
வீரமிகு நெஞ்சுரத்துடன் போர்க்களத்தில்
இறங்குவோரும்

வீராவர் அவர்கள் தான் விவசாயி என
கூறப்படுவோராவர்.

(விவசாயப் பெண் வருகிறாள்)

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி
பிறந்த நாட்டின் விருத்திக்களித்து
கையிலெடுத்த கதிர்களைப்போல நீதி
சமநிலையாக்கிப் பரப்பி
போராட்டமென்றால் களத்துக்கன்றி
பின்னொருபோதும் வாங்காத
வருக்குத்தான் பொன்னெனப் போற்றும்
விவசாயப் பெண்ணெனன்பர்
மலைப்பாம்புபோல் செல்வந்தரின் விஷக்
கொடுக்கால் அமத்தப்பட்டோர்.
மலைமீதேற்றிய தீபம்போலும் கூட்டு
பலத்தை பாதுகாப்போர்
ஆழ்ந்த திட்டமுடன் போர்க்களத்தின்
முன்னணியில் செல்வோர்
விவசாயத்தை விருத்திசெய்து நாட்டு
ஊண் உடைக்காக வியர்வை சிந்துவோர்

எல்லோரும் பாடிக்கொண்டே ஆடுகிறார்கள்.

விவசாயி தொழிலாளி கூட்டணி
அங்குதான் எங்கள் ஜயபூமி
ஒற்றுமையின் சக்தி பிரகாசித்து
பொது எதிரிகள் கொட்டத்தை ஒடுக்கி
இம் முக்கிய எச்சரிக்கையுடன்
எதிர்கொள்வோம் பகிஷ்கரிப்பை

தொலைத்துவிடு - தொலைத்துவிடு - தொலைத்துவிடு.

எல்லோருமாக மேடைக்கு வந்து வணங்குகிறார்கள்

ஒரு கையினால் முடியாது தட்டிச் சத்தம் செய்வதற்கு
விரலொன்றால் முடியாது முஷ்டியடிப்பதற்கு.
ஒருதடியை முறிக்கலாம் கட்டை முறிக்க முடியாது
ஒற்றுமை ஒன்றே எமக்குள்ளது வெற்றி காண்பதற்கு.

கட்டிடங்களுக்கான

**இரும்புச் சாமான்கள்**
**சிமெண்ட்**
**தகரம்**
**வலை**
**பைப் பிட்டிங்ஸ்**

முதலியனவும்

**லக்ஸோல் பெயிண்ட்**

வகைகளும் பெறுவதற்கு

**இன்றே விஜயம் செய்க**

**லங்கா ட்றேடர்ஸ்**


24, பசார் வீதி,
பதுளை.
போன் ; 397

உங்கள் கைக்கடிகாரங்கள் மணிக்கூடுகள் அல்லது வானொலிப் பெட்டிகள் பழுதடைந்துவிட்டதா? செனித் வாச் கம்பனிக்கு உடனே விஜயம் செய்யுங்கள்.

நேரடியாக உப உறுப்புக்களை இறக்குமதி செய்து சிறந்த முறையில் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.

**செனித் வாச் கம்பனி**

56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



O தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

O அவர்கள் முற்றும் திறந்த முனிவர்கள்.

**படியுங்கள்**

**சிரிக்கவும்**
**சிந்திக்கவும்**
**"சிரித்திரன்"**

ஆசிரியர் 'சிரித்திரன்'
101/4, சென்ற் பெனடிக்ஸ் மாவத்தை
கொழும்பு-13

இப் பத்திரிகை ஆரியர் வீதி, கொழும்புத்துறையில் வசிக்கும் திரு. இ. செ. கந்தசாமி அவர்களால், யாழ் ஸ்ரீ பார்வதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பரிசு பெற்ற எழுத்தாளர்கள் !

இவ்வாண்டும் சாகித்திய மண்டலப் பரிசு முற்போக்கு இலக்கியத்தைச் சேர்ந்த இருவருக்குக் கிடைத்துள்ளது.

ஆக்க இலக்கியத் துறையில் முன்னணியில் திகழும் திரு. கணேசலிங்கன் அவர்களின் 'நீண்டபயணம்' என்னும் நாவலுக்கும், டாக்டர் சிவஞானசுந்தரம் ('நந்தி') அவர்களின் 'மலைக் கொழுந்து' நாவலுக்கும் பரிசு கிட்டியுள்ளது.

'நற்போக்கு இலக்கியத் தம்பிரான்களாலும், 'இழிசனர் இலக்கியம்' என எள்ளி நகையாடும் பண்டித மரபுப் பரப்பிரமங்களாலும், இரசிக இலக்கியக் கூட்டங்களாலும் எவ்வளவுதான் முற்போக்கு இலக்கிய வட்டத்தை கீழ்மைப்படுத்தப் பெரு முயற்சி செய்த போதிலும், சாகித்திய மண்டலத்தாற்கூட புறக்கணிக்க முடியாத அளவு முற்போக்கு இலக்கிய இயக்கத்தினர் ஆக்க இலக்கியத் துறையில் முன்னணியில் திகழ்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதனால் சாகித்திய மண்டலப் பரிசு தகைமையானவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது என்பதல்ல; பரிசு கிடைக்காத எழுத்தாளர்கள் நல்ல இலக்கியங்களை படைக்கவில்லை என்பதும் இதன் அர்த்தமல்ல.

மக்களின் ஜீவாதார பிரச்சினைகளை அடிநாதமாகக்கொண்டு படைக்கப்பட்ட நாவல்கள் என்ற வகையில் நீண்ட பயணமும், மலைக்கொழுந்தும் உயிர்த் துடிப்புடன் திகழ்கின்றன. அவற்றில் ஒரு சில குறைபாடுகள் இருந்த போதிலும் நல்ல முயற்சிகள். இந்த நூல்களுக்குப் பரிசு கொடுத்தது மூலம் சாகித்திய மண்டலம் ஓரளவுக்குத் தன் தகைமையைக் காற்பாற்றிக் கொண்டது.

'பரிசு' பழுது செய்யாதிருக்க
எழுதுகோல் பேசட்டும்!

---

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணவேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

—பாரதி

---

தபாற்கந்தோரில் பதிவு செய்யப்பட்டது. பதிவு எண்: Q P. 59/300

தமிழில்

## மாஓ - சே-துங் நூல்கள்

1. புதிய ஜனநாயகம் பற்றி — -75
2. சுயேச்சை வாதத்திற்கு எதிராகப்போரிடுக - -25
3. மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் - -35
4. ஐக்கிய முன்னணிக்குள் தனித்துவம் - -20
5 எங்கள் படிப்பு முறையைச் சீர்திருத்துதல் - -25
6. தலைமை முறைகள் பற்றி - -20
7. நடைமுறையைப் பற்றி - -40
8. சீனச் சமுதாயத்திலுள்ள வர்க்கங்களின் ஆராய்வு - -35
9 சீனாவில் செங்கொடி அதிகாரம் நிலைத்திருக்க முடிவது ஏன்? - -25

முழுவதும் ஒரே முறையில் ( செற்டாக ) வாங்குவதாக இருந்தால் அதற்கான சகாய விலை - 2-50

*யாழ் புத்தக நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**யாழ் புத்தக நிலையம்**

ஸ்டேசன் சந்தி, ... யாழ்ப்பாணம்.

எதிர்பாருங்கள்

**எஸ். ரி. நாகலிங்கம்ஸ்**
**லக்சுமி சேலைகளை**

உள்ளூர் குழித்தறிச் சேலை
வேட்டி
சால்வை

முதலியவற்றிற்கும்
உங்களுக்குத் தேவையான

*நெசவுக்குரிய நூல் வகைகள்*
*நெசவுக்குரிய உபகரணங்கள்*

யாவற்றிற்கும்

**எங்கள் ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்.**

கிறே நூல் கலர் பண்ணுவதற்கு இருத்தலுக்கு 2/50 ரூபாவும் நூலும் கொடுத்தால் வேண்டிய கலர் நூல் உடன பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். ரி. நாகலிங்கம் அன் கோ.**

கந்தரோடை றோட், ... சுன்னாகம்.

ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம். [ போன்: 689 ]